பள்ளிக் கல்வித்துறைக்காக

வெளியீடு:
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

# கனவு ஆசிரியர்

ஆசிரியர்களுக்கான மாத இதழ்


- 01 ஜூலை 2023
- கனவு 2 இதழ் 13
- விலை : ரூ.20/-
- சென்னை

KANAVU AASIRIYAR
Monthly magazine • 01 - JULY 2023
Kanavu 2 • Issue 13 • Price: Rs. 20/- • Chennai




## உயர்கல்வி வழிகாட்டி

அசத்தும் ஆஷா தேவி!

- சூழலியலை மாணவர்களுக்கு கற்பிக்க 8 ஆலோசனைகள்
- அயல்நாட்டுக் கல்வி
- வகுப்பறை அனுபவங்கள்

# அரசுப் பள்ளிகளில் நூலகப் பாடவேளை

சின்னச் சின்னக் கதைகள்


படக்கதைகள்

எளிமையான கவிதைகள்

தலைவர்களைப் பற்றிய தகவல்கள்



இவற்றை எல்லாம் தெரிந்துகொள்ள ஏராளமான
**புத்தகங்கள் இனி உங்கள் வகுப்பறையில்.**







உலகளாவிய அரங்கில் அரசுப் பள்ளி மாணவர்கள் சாதிப்பதற்கான
**களத்தை ஆசிரியர்களாகிய நாம் உருவாக்குவோம்!**

# உள்ளடக்கம்



வளமான வகுப்பறைகள் 14



42

சிறுகதை
சம்மதங்கள் எங்கிருந்து பிறக்கின்றன?
– பாவண்ணன்


## 04 கல்வி

04 உயர்கல்வி வழிகாட்டி!
08 கியூபா கல்வி முறை
10 ஆட்டிசம் அறிவோம் – தொடர்
16 சாதித்து வரும் குளோபல் டீச்சர்!
19 நோபல் பரிசும் அதன் பின்னணியும்

## 20 வாழ்க்கை

20 புத்தகங்களை அடுக்க அலமாரிகள் போதவில்லை
22 மாணவர் எண்ணிக்கையை 10 மடங்கு உயர்த்திய ஆசிரியர்
25 வாழ்ந்து காட்டுதலே முதன்மைக் கல்வி
28 என்.சி.சி.யில் நாடகம் நடித்தோம்! – ஆர். பாண்டியராஜன்
30 ‘யிடான்’ பரிசை வென்ற முதல் ஆசியப் பெண்

## 32 சமூகம்

32 ஊரும் பெருமையும் உணர்த்திடும் குறியீடு
34 கரும்பலகை அன்றும் இன்றும்
36 சூழலியலை மாணவர்களுக்குக் கற்பிக்க 8 ஆலோசனைகள் – கோவை சதாசிவம்

## 38 நலம்

38 சிறுநீரகத்தைப் பாதுகாக்கத் தண்ணீர் குடிங்க!

## 41 பொது

41 ஆசிரியர் அனுபவம் – உங்களிடமிருந்து...
48 சினிமா – கல்வி எனும் வலிமையான ஆயுதம்
50 வகுப்பறை அனுபவங்கள்
52 கவிதை – பகல்நேர வகுப்பறை



கனவு ஆசிரியர்
Kanavu Aasiriyar Monthly

- 01 ஜூலை 2023
- கனவு 2 இதழ் 13
- விலை : ரூ.20/-
- சென்னை

● பதிப்பாளர் / ஆசிரியர் : செ. அமுதவல்லி ● அச்சிட்டோர்: பா. ராஜ்குமார் ● அச்சகம்: ராசி கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட், 69–71/A, சிட்கோ தொழிற்பேட்டை, திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம் – 600 124. ● பதிப்பகம்: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, எண். 68, கல்லூரிச்சாலை, சென்னை – 600 006. மின்னஞ்சல்: kanavuaasiriyar@tnschools.gov.in




நான் முதல்வன்

# உயர்கல்வி வழிகாட்டி

எத்தனையோ வகை படிப்புகள் உண்டு, எத்தனையோ துறைகள் உண்டு. ஆனால் அனைத்தும் எல்லோருக்கும் தெரிவதில்லை. கொரியப் பாடகர் குழு பற்றிய தகவல்களை எல்லாம் விரல்நுனியில் வைத்திருக்கிற மாணவர்களுக்கு எந்த க்ரூப் எடுத்தால் என்னென்ன படிக்கலாம், என்ன வேலை கிடைக்கும் என்கிற விவரங்கள் கூட தெரிந்திருப்பதில்லை! பல பள்ளிகளில் ஆசிரியர்கள்தான் நன்றாகப் படிக்கிற மாணவர்களுக்கான வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். அவர்கள்தான், 'உனக்கு கணக்கு நன்றாக வருகிறது. நீ ஆடிட்டர் ஆகலாம், உனக்குத் திறமை இருக்கிறது. நீ ஐ.ஏ.எஸ். தேர்வுக்குத் தயாராகு' என்றெல்லாம் வழிகாட்டுகிறார்கள்.

ஒருவேளை பள்ளியில் படிக்கும்போதே உயர்கல்வி படிக்க எந்தெந்த படிப்புகள் உள்ளன, என்னென்ன படித்தால் என்ன வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்கிற தகவல்களும், அந்த வேலை வாய்ப்பை எட்ட என்னென்ன வழிகள் உள்ளன என்பதையும் மாணவர்களே அறிந்திருந்தால் தங்களுடைய எதிர்காலத்தைத் தங்களுக்குப் பிடித்தபடி, அவர்களின் ஆர்வத்திற்கு ஏற்றபடி திட்டமிட வசதியாக இருக்கும் இல்லையா! இசையில் ஆர்வமுள்ள ஒருவர் இசை பற்றிய படிப்புகள் பற்றித் தெரிந்திருந்தால் சரியாகத் திட்டமிட்டு படிக்கலாம் இல்லையா!

இப்படியான வழிகாட்டுதலுக்காகவே தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அரசுப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தி இருக்கிற திட்டம் தான் 'நான் முதல்வன்' திட்டம். இதன் ஒரு பகுதிதான் 'கல்லூரிக் கனவு'.

இது, அனைவருக்கும் உயர்கல்வி, வேலை வாய்ப்பில் சமவாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்கிறது. மாணவர்களின் உயர்கல்விக் கனவை எட்ட 'உயர்கல்வி வழிகாட்டிக் குழு' மூலம் உதவுகிறது.

இத்திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் ப்ளஸ் ஒன் மற்றும் ப்ளஸ் டூ படிக்கும் பத்து லட்சத்திற்கும் அதிகமான மாணவர்களுக்கென 'உயர்கல்வி வேலை வாய்ப்பு வழிகாட்டி' என்கிற பாடநூல், தமிழ்நாடு அரசு பாடநூல்




நிறுவனத்தின் சார்பில் அச்சிடப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உயர்கல்வியில் என்னென்ன படிக்கலாம் என்பதைப் பற்றிய விரிவான தகவல்களை இந்த நூலில் வழங்கப்பட்டுள்ளது. அதோடு என்னென்ன படித்தால் எப்படிப்பட்ட வேலை வாய்ப்புகள் உண்டு, அந்த வேலைகளுக்கு எப்படித் தயாராக வேண்டும், என்னென்ன கூடுதல் படிப்புகள், துணைப் படிப்புகள் தேவை, நம்முடைய தனித்திறமைகளை வளர்ப்பது எப்படி, கூடுதல் திறன்களை வளர்க்க என்ன செய்யலாம் என்பதையெல்லாம் கற்றுத் தருகிறது.

இந்த உயர்கல்வி வழிகாட்டி பாடநூல் தனிப் பாடமாகவே மாணவர்களின் பாடத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மாதந்தோறும் நான்கு வகுப்புகள் எனப் பள்ளி ஆசிரியர்களாலேயே கற்றுத் தரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்படிப் பாடமெடுக்க ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பிரத்யேகப் பயிற்சிகள் வழங்கப்பட்டு தயார் செய்யப்படுகின்றனர்.

மாணவர்கள் தங்களுடைய ஆதர்சமாக எண்ணுகிற ஆசிரியர்கள்தான் அவர்களுக்கான மிகச் சிறந்த வழிகாட்டிகளாக இருக்க முடியும். வேறு யாரையும் விட, தொடர்ந்து அவர்களோடு அன்றாடம் உரையாடுகிற அவர்களுக்கே மாணவர்களின் தனித்திறனும் ஆர்வமும் அதிகம் தெரிந்திருக்கும்.

**உயர்கல்வி வழிகாட்டி நூலின் பதிவிறக்கத்திற்கு இதை ஸ்கேன் செய்க**

இப்படிப்பட்ட ஆசிரியர்களின் மூலம் இப்பாடங்கள் கற்றுத் தரப்படுவது மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் தன் மாணவர்களில் பலரை வெற்றியாளர்களாக உருவாக்குகிறோம் என்கிற பெருமிதத்தை அளிப்பதாக உள்ளது.

இனி வரும் நாட்களில் பத்திரிகையாளர் ஆகவேண்டும் என ஆசைப்படுகிற ஒரு மாணவன் அது சார்ந்த படிப்பைத் தெரிவு செய்யலாம். தொடர்பே இல்லாமல் வேறு படிப்பின் பின்னால் ஓடத் தேவை இருக்காது. பத்திரிகையாளர் ஆகவேண்டும் என்ற தன் கனவை நிறைவேற்ற, அதற்கு ஏற்ற விசுவல் கம்யூனிகேசனையோ, இதழியல் சார்ந்த ஒரு மேற்படிப்பையோ அம்மாணவர் தேர்ந்தெடுப்பார். தன் பெற்றோரிடம் தன் ஆர்வத்தையும் அதற்குரிய பாதையையும் தெளிவாக எடுத்துரைப்பார். இனி எந்த மாணவரும்

கட்டாயத்தால் கல்லூரிக்குச் செல்ல வேண்டியது இருக்காது. தாம் விரும்பியதைப் படிக்கவே செல்வர். அந்த மாற்றத்திற்கான புரட்சியைத் தொடங்கிவிட்டனர் நம் ஆசிரியர்கள்!

## உதவிடும் இணையதளம்

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு உயர்கல்வி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள், தான் விரும்பும் வகையில் உயர்கல்வி பயில 2000க்கும் மேற்பட்ட படிப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் சார்ந்த தகவல்கள் நான் முதல்வன் https://naanmudhalvan.tnschools.gov.in இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
- மாணவர் சேர்க்கை நுழைவுத் தேர்வு குறித்து ஊடகங்களிலும் இணையதளத்திலும் வரும் அறிவிப்பு மாணவர்கள் பயன் பெறும் வகையில் இருக்கிறது.
- அரசு, தனியார் துறை மற்றும் அறநிறுவனங்கள் வழங்கும் கல்வி உதவித் தொகை குறித்த விவரங்கள் மாணவர்களுக்கு உதவும் வகையில் இருக்கிறது.
- மாணவர்களைக் கல்வி தொடர்பாக உரையாடுவதற்கான திறன், கலாசாரத் திறன், விளையாட்டுத் திறன், பொழுதுபோக்குத் திறன் போன்ற திறன்களை வளர்க்க உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி ஆலோசனை மையம் உதவுகிறது.
- உயர்கல்விக்கு விண்ணப்பிக்கும்பொழுது பள்ளிச் சான்றிதழ்களுடன் இணைக்கப்பட வேண்டிய கீழ்க்காணும் சான்றிதழ்களைப் பெறுவதற்குப் பள்ளியின் உயர்கல்வி வழிகாட்டி ஆலோசனை மையம் உதவி புரிகிறது.
  - சாதிச் சான்றிதழ்
  - ஆதார் அடையாள அட்டை
  - வருமானச் சான்றிதழ்
  - விளையாட்டுச் சான்றிதழ்கள்
  - இருப்பிடச் சான்றிதழ்
  - முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுச் சான்றிதழ்



படிப்புகள் கல்லூரிகள் நுழைவுத் தேர்வுகள் உதவித்தொகை கல்விக் கடன் வேலை வாய்ப்பு



- இலங்கைத் தமிழ் அகதி என்பதற்கான சான்றிதழ்
- முதல் தலைமுறை பட்டதாரிச் சான்றிதழ்
- மாற்றுத்திறனாளி என்பதற்கான சான்றிதழ்

- கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கை பெற்ற பிறகே கல்விக் கடன் பெறுவதற்கு வங்கிகளில் விண்ணப்பிப்பது பற்றி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் எடுத்துக் கூற வேண்டும்.

- மாணவர்களுக்கு ஏற்படும் எதிர்மறை எண்ணங்கள், தேர்வு பயம், மனநெருக்கடி, கவனச்சிதறல்கள், தாழ்வுமனப்பான்மை, அதீத நம்பிக்கை, படிக்கும் திட்டமில்லாமை, மனதை ஒருமுகப்படுத்தி கவனத்தைச் செலுத்தாமை போன்ற விஷயங்களை மாணவர் மனதிலிருந்து நீக்க உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி ஆலோசனை மையம் செயல்பட்டு வருகிறது.

- அனைத்து மாணவர்களும் நல்ல உயர்கல்வி பெற்று, வாழ்க்கைத்தரம் வளப்படுத்தி, சமுதாயத்தில் பங்கேற்கவும் இதன் மூலம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு திசைக்காட்டிக் கருவியாக நான் முதல்வன் திட்டம் அமையும்.

- அரசுப் பள்ளியில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் உயர்கல்வி பெறும் வகையில், மக்கள் நல்வாழ்வுத்துறை, சமூக நலத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் சேர்ந்து உள்ளடக்கிய கல்வியைச் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் உயர்கல்வி கற்பதற்கும் வேலைவாய்ப்பு பெறுவதற்கும் உயர்கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

- மேலும், உயர்கல்வி சார்ந்த தகவல்களுடன் வேலைவாய்ப்பு சார்ந்த தகவல்கள் மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த நம்பிக்கையை அளிக்கிறது. வேலைவாய்ப்பு பெறுவதற்கான முன் தயாரிப்புகள், எதிர்கொள்ளும் சவால்கள் போன்றவை பள்ளி உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி ஆலோசனை மையம் வழங்குகிறது.

- உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்து அடிக்கடி மாணவர்கள் மனதில் தோன்றும் கேள்விகளுக்கு உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி ஆலோசனை மையம் பதில் அளிக்கிறது.



# கிராமத்திற்கே சென்று கற்பித்த கியூபா கல்வி முறை



கியூபாவின் கல்வி அமைப்பு நீண்ட காலமாக உயர்ந்த மதிப்போடு பார்க்கப்படுகிறது. கியூபாவின் முதல் பல்கலைக்கழகமான ஹவானா (Havana University), 1727ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அங்கு பெயர் பெற்ற கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் நிறைய உள்ளன.

கியூபாவில் கல்வியை, ஃபிடல் காஸ்ட்ரோ தலைமையிலான அரசுக்கு முன், பின் என்றுதான் பிரிக்க முடியும். காஸ்ட்ரோ ஆட்சியில் பள்ளிகள் மறுசீரமைப்பு செய்து திறக்கப்பட்டன. 1959ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 817 எழுத்தறிவு மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மார்க்சிய தத்துவத்தை போதிப்பதும், வாசிப்பை அதிகப்படுத்துவதுமே அதன் முக்கிய குறிக்கோள். மிகக் குறுகிய காலத்திலேயே கல்வியில் பெரும் மாற்றத்தைக் கொண்டுவந்தது காஸ்ட்ரோ அரசு.

1959ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின் ஃபிடல் காஸ்ட்ரோவின் நிர்வாகம், அனைத்துக் கல்வி நிறுவனங்களையும் தேசியமயமாக்கி, அவை அரசின் கீழ் இயங்க வேண்டும் என்ற நிலையைக் கொண்டுவந்தது.

கல்வியில் சித்தாந்தத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கல்வி மட்டும் பண்பாட்டுத் திட்டங்கள், மார்க்சிய சித்தாந்த அடிப்படையில் இருக்க வேண்டும் என அந்நாட்டின் அரசியலமைப்பு வலியுறுத்துகிறது. கல்வியின் செலவுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

## வரலாறு

16ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் 1898ஆம் ஆண்டு வரை ஸ்பெயினின் காலனியாதிக்கத்தில் சிக்கித் தவித்தது கியூபா. அதன் பிறகு நடந்த ஸ்பெயின் – அமெரிக்க யுத்தம், கியூபாவை அமெரிக்காவின் கரங்களில் விழச் செய்தது. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கியூபாவின் எழுத்தறிவு விகிதம் 36 – 42 வரை இருந்தது. அப்போது வளர்ந்துவரும் நாடுகளின் எழுத்தறிவு விகிதப் பட்டியலில் இது உயர்ந்த இடமாகும். கியூபாவின் கல்வி அமைப்பு வலுவாக இருந்தாலும்,

அந்நாட்டின் குழந்தைகளில் பாதி பேர் மட்டுமே கல்வி பயின்றனர். ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி எட்டாத தூரத்திலேயே இருந்தது. நகரத்தை விட கிராமப்புறங்களில் எழுத்தறிவு விகிதம் மிகக் குறைவாகக் காணப்பட்டது. 1959ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின் ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கிராமப்புறக் குழந்தைகளுக்கு அவர்கள் இடங்களுக்கே சென்று பாடம் நடத்த ஆசிரியரை நியமித்தது காஸ்ட்ரோ அரசு.

2001ஆம் ஆண்டு கியூபாவில் 15 – 24 வயதுடைய 97 சதவிகிதம் பேர் எழுத்தறிவு பெற்றிருந்தனர். புதிய அரசின் கொள்கையோடு மக்கள் பயணிக்க, அவர்களுக்குக் கல்வி அவசியம் என கியூபாவின் தலைவர்கள் கருதினார்கள்.

## கியூபாவில் பெண் கல்வி

கியூபாவில் புரட்சிக்குப் பின் நாட்டில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தது. அதில் முக்கியமானது பெண்கள் வாழ்வில் கொண்டுவந்ததுதான். அதற்கு முன்பு வீட்டு வேலை, தோட்ட வேலை, விவசாய வேலை போன்ற சில வேலைகளைச் செய்ய மட்டுமே பெண்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

1960ஆம் ஆண்டு கியூபா பெண்களுக்கான கூட்டமைப்பு (The Federation of Cuban Women) தொடங்கப்பட்டது. கியூபாவின் அனைத்து விவகாரங்களிலும் பெண்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்பது அக்கூட்டமைப்பின் நோக்கம். கியூபா சந்திக்கும் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுப் பிரச்சினைகளில் பெண்கள் கவனம் செலுத்தவேண்டும் என அரசு விரும்பியது.

கியூபா பெண்களுக்காகக் கல்வித் திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டன. கிராமப்புறப் பெண்களுக்குக் கல்வியும், வேலைக்கான பயிற்சியும் அவர்கள் விருப்பத்தின் பேரில் வழங்கப்பட்டது. நகரத்தில் பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அந்தப் பெண்களுக்குக் கல்வி வழங்கியதோடு, 1961ஆம் ஆண்டு கியூபா அரசு பாலியல் தொழிலுக்குத் தடை விதித்தது. பணியிடங்களில் ஒடுக்குமுறையைச் சந்தித்த பெண்களின் மனநலனைக் கருத்தில் கொண்டு மனநல ஆலோசனை மையங்கள் தொடங்கப்பட்டன.

## தொடக்கம் மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி

ஆறு வயதுக்கு மேல் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் வருகைப் பதிவு அவசியம். வகுப்பின் தர அளவுக்கு ஏற்ப மாணவர்களுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டன. தொடக்கக் கல்வி ஆறு ஆண்டுகள், அதாவது ஒன்று முதல் ஆறாம் வகுப்பு வரை. இரண்டாம் நிலைக் கல்வி இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்படுகிறது. அவை அடிப்படை இரண்டாம் நிலைக் கல்வி, பல்கலைக்கு முந்தைய இரண்டாம் நிலைக் கல்வி ஆகும். கடின உழைப்பு, சுய ஒழுக்கம், தேசப்பற்று ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பாடத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

தொடக்கக் கல்வியில் குழந்தைகளுக்கு நடனம், தோட்டக் கலை, நலம் மற்றும் சுகாதாரம் குறித்த பாடங்கள், வரலாறு போன்றவை கற்பிக்கப்படுகிறது.

அடிப்படை இரண்டாம் நிலைக் கல்வியின் இறுதியாண்டில், மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான துறையைத் தேர்வு செய்கின்றனர். அடுத்த இரண்டு ஆண்டுக் கல்வி முடிந்ததும், அவர்களின் தகுதிக்கு ஏற்ப சிறந்த கல்வி நிறுவனங்களில் மேற்படிப்பைத் தொடரலாம். 2010ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல் காரணமாகக் கல்வி வழங்குவதில் சில தடைகள் வந்தாலும், அதையும் கியூபா அரசு சரி செய்தது.

## சர்வதேச மாணவர்களுக்கு அழைப்பு

1999ஆம் ஆண்டு கியூபாவில் மருத்துவப் படிப்பு படிப்பதற்காக அமெரிக்கா, பிரிட்டன், ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பெரும் பொருளாதாரப் பின்புலம் இல்லாத மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இன்றும் மருத்துவப் படிப்புக்காக கியூபா வருகின்றனர். சர்வதேச மாணவர்களுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இப்படி கல்வி சார்ந்து பல்வேறு துறைகளிலும் கியூபா சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ●


உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்

நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்

மாணவர்களே!
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?

பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண்



14417

எல்லோருக்குமான
கல்வி-7



# ஆட்டிசம் அறிவோம்

இரண்டாம் பகுதி

கடந்த மாத இதழில் ஆட்டிசநிலைக் குழந்தைகள் பற்றிய பொதுவான அறிமுகமும், அவர்கள் வகுப்பறையில் எப்படி இருப்பர் என்பதை எல்லாம் பார்த்தோம். அதன் தொடர்ச்சியை இனி காண்போம்.

## சமூகச் சிந்தனை, சமூகம் சார்ந்த கற்பனைத் திறனில் காணப்படும் சிரமங்கள் (Social Thinking / Social Imagination)

- சக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே கருத்துப் பரிமாற்றம் செய்ய முடியாமல் இருப்பர்.
- ஒருவரின் மனநிலை மற்றும் செயலுக்கு இடையேயான தொடர்பைப் புரிந்துகொள்ள இயலாது இருப்பர்.
- சக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணங்கள், உணர்வுகள், நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ள இயலாது இருப்பர்.

**உதாரணம்** : கல்விச் சுற்றுலா, விளையாட்டுப் போட்டி

## வகுப்பறையில் பிரதிபலிக்கும் விதம்

ஆட்டிச பாதிப்புடைய மாணவ - மாணவியர் வகுப்பறை சூழலில் கீழ்க்காணும் பிரச்சினைகளைப் பொதுவாகச் சந்திக்க நேரிடுகிறது.

- அடுத்து என்ன நடக்கும் அல்லது நடக்கலாம், நடக்கப் போகிறது என்பதைக் கணிப்பதில் சிரமம்.

**உதாரணம்** : வகுப்பு ஆசிரியர் விடுப்பில் இருப்பதை அறியாதிருப்பர்.



- ஆபத்து, அபாயம் என்பதை அறிந்து செயல்படுவதில் சிரமம்.

  **உதாரணம்** : கரண்ட், ஒயர்-கரண்ட் ஷாக் அடிக்கும் என அறியாமல் பிடிப்பது, தொடுவது.

- பழக்கமில்லாத அல்லது புதிய சூழ்நிலை மாற்றங்களை ஏற்றுக் கொள்வதில் சிரமம்.

  **உதாரணம்** : தன் விருப்ப ஆசிரியை வரவில்லை என்றால் வேறு ஆசிரியர் வகுப்பிற்கு வருவதையோ, அவரின் வகுப்பிற்குச் செல்வதையோ ஏற்றுக் கொள்ளாமை.

- சமூகம் சார்ந்த விளையாட்டுகளில் கற்பனைத் திறன் சிரமம், பாதிப்பு காணப்படலாம்.

  **உதாரணம்** : விளையாட்டுப் பொருட்களைக் கொண்டு வினோதமாக அல்லது மாற்றம் இல்லாமல் ஒரே மாதிரியாக விளையாடுவது, அதாவது, விளையாட்டுப் பொருட்களை வரிசையாக அடுக்குவது, சக்கரத்தை கையால் தொடர்ந்து சுழற்றுவது, சுவிட்சை On / Off தொடர்ந்து செய்வது.

- ஒரு பொருளைக் கண்டு விளையாடுவதைக் காட்டிலும், அப்பொருள் செயல்படும் விதத்தை ஆராய அதிகம் விரும்புவர்.

  **உதாரணம்** : சத்தம் ஏற்படுத்தும் பொம்மைகள்.

- சேர்ந்து விளையாடுவது, விட்டுக்கொடுத்து விளையாடுவதில் சிரமம் காணப்படலாம்.

- சேர்ந்து விளையாடும்பொழுது தான் விரும்பும் விதத்திலேயே அதிகம் விளையாட்டுப் பொருளை உபயோகித்து விளையாட விரும்புவர்.

  **உதாரணம்** : பொருட்களை வரிசையாக அடுக்குவதை அதிகம் விரும்புவர் தொலைக்காட்சியில் பார்த்த விளம்பரம், நடிகர் போன்று பேச, நடிக்க விரும்புவர்.

- விளையாட்டு மற்றும் மதிய உணவு நேரங்களில் எப்படிச் செயல்படுவது, என்ன செய்ய வேண்டும் என்பதை அறியாமல் தெரியாமல் இருக்கலாம்.

- வேறுபட்ட, வினோதமான ஆர்வங்கள்

  **உதாரணம்** : வரைபடங்கள், கைப்பேசிகள் மகிழ்ச்சி தரக்கூடிய மாற்றங்களைக் கூட ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் இருப்பர். அதாவது, கல்விச் சுற்றுலா, ஆண்டு விழா, பரிசளிப்பு விழா.

  குறிப்பு : ஆட்டிச பாதிப்புடைய மாணவ - மாணவியருக்குக் கற்பனைத்திறன் நன்றாக இருக்கும். சமூகம் சார்ந்த கற்பனைத் திறனில் மட்டுமே பாதிப்பு காணப்படும்.

  **உதாரணம்** : மாணவர்களின் ஆர்வத்தைப் பொறுத்து ஓவியம், இசை மற்றும் பிற துறை அல்லது கலைகளில் சிறந்து விளங்கலாம்.



## வகுப்பறை சூழலில் ஏற்படும் பிற பிரச்சினைகள்

- செய்த செயலைத் திரும்பத் திரும்பத் தொடர்ச்சியாக ஒரே மாதிரியாகச் செய்வது.

**உதாரணம்** : விரல்களை அசைப்பது, உடலை முன்னும் பின்னும் அசைப்பது, நின்ற இடத்திலேயே சுழல்வது.

- பொருட்களைத் தொடர்ந்து ஒரே மாதிரியாகச் சுழற்றுவது.

- ஒரு பொருளின் ஒரு பகுதியில் மட்டும் அதிக கவனம்.

**உதாரணம்** : கார் வீல்




- தொடு உணர்வு சார்ந்த தூண்டலுக்கு வழக்கத்திற்கு மாறான எதிர் செயல் செய்தல்.

**உதாரணம்** : நெருப்பில் விரல் வைத்துச் சத்தமிடாமல் இருப்பது, அடிப்பட்டு ரத்தம் வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் தான் செய்யும் செயலைத் தொடர்ந்து செய்வது.

- மிக அருகில் செல்வது.
- எந்தப் பொருளையும் முகர்ந்து பார்த்தல்.
- எந்தப் பொருளையும் வாயில் வைத்தல்.
- உயரத்தில் ஏறப் பயப்படுதல்.
- கீழே இருக்கும் பொருளைக் கவனிக்காமல் நடத்தல்.
- அடித்தல், கிள்ளுதல், தள்ளிவிடுதல் மற்றும் பல. இம்மாதிரியான சமூகத்தால் ஏற்கப்படாத நடத்தைகளை ஆட்டிசக் குறைபாடு உடைய மாணவ, மாணவியர் புலன் ஒருங்கிணைப்பதில் ஏற்படும் பாதிப்பினாலோ, சமூகச் சூழ்நிலையில் புரிந்து கொள்வதில் ஏற்படும் சிரமத்தினாலேயோ இவற்றில் சிலவற்றை வகுப்பறையில் வெளிப்படுத்துகின்றனர்.

## புலன் உணர்வு மண்டலங்கள் பொதுவாகச் செயல்படும் விதம்




### கேட்கும் உணர்வு மண்டலம்

ஒலியின் தன்மைகளை ஒருங்கிணைத்து அதை உணர வைக்கிறது.

**உதாரணம்** : ஆசிரியர் பாடம் எடுப்பதைக் கவனித்தல்.

### விழிசார் உணர்வு மண்டலம்

பார்க்கும் சூழலுக்கு ஏற்றவாறு பொருள் பொருந்தி அக்காட்சிக்கு ஏற்பச் செயல்பட வைக்கிறது.

**உதாரணம்** : இறை வணக்கத்தில் வரிசையில் நிற்பது.

### நுகர்தல் உணர்வு மண்டலம்

பொருட்கள், வாசனைத் திரவியங்களில் வெளிப்படும் வாசனையை நுகர்தலின் வாயிலாகக் கணிக்க முடியும்.

**உதாரணம்** : கழிவறையில் பயன்படும் பினாயில் வாசனையை நுகர்தல்.

### சுவை உணர்வு மண்டலம்




சுவை உணர்வு நமக்கும், மற்றொருவருக்கும் பிரத்யேகமானது. சுவைத்த அனுபவத்தைக் கொண்டு அது என்ன சுவை என நம்மால் சொல்ல இயலும்.

**உதாரணம்** : மீன் குழம்பின் காரம் நமக்குச் சரியாய் இருக்கும், மற்றொருவருக்கு அதிகமாய் இருக்கும். கரும்பு-இனிப்பு, புளி-புளிப்பு.

## தொடு உணர்வு மண்டலம்

ஒரு பொருளைத் தொடுதலின் வாயிலாக உணர்வது.

**உதாரணம் :** சூடு, குளிர்ச்சி, காபி, ஐஸ்.



## சமநிலை உணர்வு மண்டலம்

சமநிலை உணர்வு மண்டலம் புவி ஈர்ப்பு மாற்றத்தை நாம் உணர்ந்து நம் உடலைச் சமநிலைப்படுத்த உதவுகிறது.

**உதாரணம் :** நொண்டி விளையாடுதல்

## சீர் செய்யும் உணர்வு மண்டலம்

தசைகள், மூட்டுகளின் செயல் இணைக்கும் உணர்வு மண்டலம்.

**உதாரணம் :** பென்சில், பேனா பிடிப்பது, தோப்புக்கரணம் போடுதல், கயிறு குதித்தல்.



## புலன் ஒருங்கிணைப்பில் ஏற்படும் பாதிப்புகள்

புற உலகத்தைப் பற்றிய தகவல்கள் நம் புலன் உறுப்புகள் வாயிலாக உணர்வுகளாக மாற்றப்பட்டு, மூளையை அடைந்து அங்கிருந்து வெளிப்படும் கட்டளைகளைப் பொறுத்து சூழ்நிலைக்கு ஏற்றவாறு உணர்வுகளை ஒருங்கிணைத்துச் செயல்பட வைக்கிறது.

**உதாரணம் :** மட்டைப் பந்து, கால் பந்து வகுப்பறையில் கவனித்தல், எழுதுதல்.

புலன் உணர்வினால் ஏற்படும் அனுபவங்கள் ஆட்டிசக் குறைபாடு உடைய மாணவர்களிடம் மற்ற மாணவ, மாணவியிடம் இருப்பதிலிருந்து வேறுபட்டு காணப்படும். புலன் உணர்வு வழி தகவல்கள் அல்லது உணர்வுகள் சிலருக்கு அதிகமாகவோ, சிலருக்குக் குறைவாகவோ ஒவ்வொரு புலன் உணர்வுகளிலும் வேறுபட்டுக் காணப்படும்.

## வகுப்பறையில் வெளிப்படும் விதம்

பள்ளிச் சூழலில் ஏற்படும் உணர்வுகள் வித்தியாசப்பட்ட, வேறுபட்ட சத்தம், காட்சி மாற்றங்கள், தொடுதல், தள்ளுதல், இடமாற்றங்கள் போன்றவை புலன் உணர்வு ஒருங்கிணைப்பில் ஆட்டிச பாதிப்புடைய மாணவர்களிடம் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால் வரையறுக்கப்பட்ட பழக்கமான சூழலில் அதிகம் செயல்படவே ஆட்டிச பாதிப்புடைய மாணவ, மாணவியர் விரும்புவர், மாற்றங்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

## அசாதாரண அமைப்பில் கவனம்

ஆட்டிச பாதிப்புடைய மாணவ, மாணவியர் அசாதாரண கவனித்தல் திறனுடையவர்களாக வெவ்வேறு விதங்களில் கவனம் செலுத்துவதில் பாதிப்பு உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

## கவனித்தல் என்பது

- பயனுள்ள விஷயத்தை கவனிக்கும்பொழுது அதன் ஒரு பகுதியை மட்டும் தீவிரமாகக் கவனிப்பதால் அவ்விஷயத்தை குறித்த முழுமையான தகவல் அவர்களால் பெற முடியவில்லை.

**உதாரணம் :** கரும்பலகை பார்க்கும் செயலில் படம் மற்றும் தகவல் எழுதப்பட்டிருந்தால் படத்தில் ஒரு பகுதியை மட்டும் பார்ப்பது.

- ஒன்றில் இருந்து மற்றொன்றிற்கு அவர்களின் கவனத்தைத் திருப்புவது கடினமாக இருப்பதால் இரண்டு செயலை ஒரே நேரத்தில் செய்வது கடினம்.

**உதாரணம் :** ஆசிரியர் பேசுவது, பலகையில் அல்லது அட்டையில், புத்தகத்தில் இருப்பதைப் பார்த்து எழுதுவது.

- தனக்கு ஆர்வமுள்ள செயல்களில் கூர்மையான கவனம் செலுத்தக் கூடியவர்கள். மறைமுக கவனம் இருக்கும்.

**உதாரணம் :** வகுப்பறைக்கு வெளியில் இருந்தாலும் வகுப்பறை செயலில் கவனிக்கக் கூடியவர்கள்.

(தொடரும்)




# வளமான வகுப்பறைகள்



அந்த வகுப்பறைக்குள் உற்சாகமும் துள்ளலுமாய் பற்பல சத்தங்கள். என்னவென்று எட்டிப் பார்த்தால், கூடை நிறைய சொல்லட்டைகள். கூவி விற்கிறது ஒரு குழந்தை.

"சொல் வாங்கலையோ... சொல்...."

"நான் வாங்குறேன்..." என்று முன்வருகிறது இன்னொரு குழந்தை.

சிறிது நேரத்தில் விற்றுத் தீர்ந்தன சொற்கள். அந்த இடத்தைக் கடப்பதற்குள் எட்டிப் பார்க்கத் தோன்றுகிறது. என்ன நடக்கிறது இங்கே?

வகுப்பறைக்குள் பயணம் (Classroom tour) என்ற விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆசிரியரின் பின்னே வரிசையாய் குழந்தைகள் தொடர்வண்டி போலச் சென்று கொண்டிருந்தனர். கதவின் அருகில் வந்ததும் ஆசிரியர், "This is a door" என்றார். சன்னலின் அருகே "This is a window" என்றார். மின்விசிறியைப் பார்த்து "This is a fan" என்றார். தொடர்ந்து குழந்தைகளும் குட்டிக் குட்டித் தொடர்களை ஆங்கிலத்தில் கூறுகின்றனர்!

மற்றொரு புறம்,

"ஏலேலோ ஐலசா ஏலேலோ...
ஏலேலோ ஐலசா ஏலேலோ...
சிவப்பு மஞ்சள் கறுப்பு வெள்ளை ஏலேலோ..
பல வண்ண மீன்பிடிப்போம் ஏலேலோ -"

என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. வண்ண அமைப்புகளைப் பாடல் மூலம் விளையாடிக் கற்றுக் கொண்டிருந்தனர் குழந்தைகள்! குழந்தைகளின் குரல்களால் நிரம்பிக் கிடக்கின்றன எண்ணும் எழுத்தும் வகுப்பறைகள்!

### கொரோனா பெருந்தொற்றும் கற்றல் இடைவெளியும்

கொரோனா பெருந்தொற்று காரணமாகத் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகள் 19 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்தன. இது மாணவர்களின் கற்றலைப் பாதித்ததோடு பெரும் இடைவெளியையும் ஏற்படுத்தி இருந்தது. குழந்தைகளின் தொடக்கக் கல்வி என்பது அவர்கள் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கு அடிப்படையாக அமைவது. இதில் ஏற்படும் தொய்வு அனைத்து நிலைகளிலும் குழந்தைகளின் கற்றலைப் பாதிக்கும். ஆகவே உலகம் முழுவதும் தொடக்கநிலையில் உள்ள கற்றல் இடைவெளியைக் களைய பல்வேறு புதிய மற்றும் மாற்று உத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## கற்றல் நிலைக்கேற்பக் கற்பித்தல் (TARL)

தொடக்க வகுப்புக் குழந்தைகளின் கற்றல் இழப்பை ஈடுகட்ட 2022ஆம் கல்வியாண்டு முதல் எண்ணும் எழுத்தும் திட்டம் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நோபல் பரிசு பெற்றவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பொருளாதார ஆலோசனைக்குழு உறுப்பினருமான எஸ்தர் டஃப்லோ என்பவரால் பரிந்துரைக்கப்பட்ட "கற்றல் நிலைக்கேற்பக் கற்பித்தல்" (TARL) என்ற அணுகுமுறையே இதன் அடித்தளமாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் 2025ஆம் ஆண்டில் 8 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் தங்குதடையின்றிப் படிக்கவும் எழுதவும் அடிப்படைக் கணக்குகளைச் செய்யவும் அறிந்திருக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு எண்ணும் எழுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எண்ணும் எழுத்தும் வகுப்பறைகளின் சிறப்பான செயல்பாடுகள் 2023ஆம் கல்வியாண்டிலிருந்து 4, 5ஆம் வகுப்புகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

## வகுப்பறை வளங்கள்

முதலில் அடிப்படைக் கற்றல் திறனாய்வு நடத்தப்பட்டு குழந்தைகளின் கற்றல் நிலை கண்டறியப்பட்டது. பின்பு அதிலிருந்து குழந்தைகள் கற்பதற்குரிய பயிற்சி நூல்கள் உருவாக்கி வழங்கப்பட்டுள்ளன. பயிற்சி நூல்களைக் குழந்தைகளிடம் கொண்டுசெல்வதற்கு ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் வகையில் ஆசிரியர் கையேடுகளும் பாடவாரியாக உருவாக்கி வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடப் பகுதியையும் கற்பிக்க ஏற்ற அடிப்படைக் கற்பித்தல் துணைக் கருவிகள் ஒவ்வொரு ஆசிரியருக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ், ஆங்கிலம், கணக்கு ஆகிய பாடங்களுடன் சூழ்நிலையியல் பாடம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருவழிகளிலும் பயிற்சி நூல்களும் ஆசிரியர் கையேடும் அளிக்கப்பட்டுள்ளன. சிறுபான்மை மொழிகளிலும் இவை உருவாக்கி அளிக்கப்பட்டுள்ளன.

## களங்களும் களஞ்சியங்களும்

குழந்தைகள், ஈடுபட்டு ஆர்வத்துடன் கற்கும் வகையில் பாடங்கள் செயல்பாடாக, விளையாட்டாக, பாடலாக, கதையாக, நாடகமாக, கதைப் பாடலாக, படக் கதையாக, தொகுப்புப் பாடமாக, பொம்மலாட்டமாக, கலை, கைவினைச் செயல்பாடுகளாக, வரைந்து வண்ணமிடுவதாக, புதிர்ச் செயல்பாடுகளாக, செய்து கற்றல் பகுதிகளாக மாற்றி அளிக்கப்பட்டுள்ளன.

குழந்தைகளின் கற்றல் நிலை, அரும்பு (நீலம்), மொட்டு (மஞ்சள்), மலர் (பச்சை) எனப் பெயரிடப்பட்டு ஏற்ற வண்ணங்களால் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன.





வகுப்பறைக்குள் கதைக் களம், பாடல் களம், செயல்பாட்டுக் களம், படைப்பாற்றல் களம் (கலை, கைவினை, பேச்சு, நடிப்பு), பொம்மலாட்டக் களம், படித்தல் களம், வினாடி வினா களம் போன்ற களங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1-3ஆம் வகுப்புகளில் களங்கள் எனக் கொண்டாடப்படும் இவை 4-5ஆம் வகுப்புகளில் களஞ்சியம் எனச் சுட்டப்படுகின்றன.


## அளவிடப்படும் கற்றல் அடைவுகள்

கற்றல் விளைவுகளின் அடிப்படையில் அனைத்துச் செயல்பாடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மதிப்பீட்டுச் செயலி வாயிலாக வாரந்தோறும் குழந்தைகளின் கற்றல் அடைவு அளந்தறியப்படுகிறது. குழந்தைகளின் அடைவு சார்ந்த தரவுகளைப் பள்ளித் தலைமையாசிரியர், வட்டாரக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் முதல் அனைத்துத் தரப்பு அலுவலர்களும் பார்ப்பதற்கும் வழிகாட்டுவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் உரியவாறு செயலித் தொழில்நுட்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## உருமாறியுள்ள வகுப்பறைகள்

- எண்ணும் எழுத்தும் வகுப்பறை, குழந்தைகளை ஆர்வமிக்க கற்போராக மாற்றியுள்ளது.
- குழந்தைகள் விடுப்பு எடுப்பதைக் குறைத்துள்ளது.
- துணைக்கருவிகளை ஆசையாகத் தொட்டும் உணர்ந்தும் மகிழ்ந்து கற்கும் வாய்ப்பை அள்ளித் தருகின்றது.
- வகுப்பறைகளில் உள்ள குட்டி மேடையும் மாதிரி ஒலிவாங்கியும் குழந்தைகளைத் தன்னம்பிக்கையுடைய பேச்சாளராக மாற்றியுள்ளது.
- குழந்தைகள் வகுப்பறைக்குள் குதூகலமாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளனர்.
- தானே முன்வந்து கற்றுக்கொள்கின்றனர்.

வகுப்பறை வண்ணங்களாலும் குழந்தைகளின் எண்ணங்களாலும் நிரம்பியுள்ளது. மொத்தத்தில் எண்ணும் எழுத்தும் வகுப்பறைகள், இலக்கு நோக்கி சிறப்பாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றன.



### சாதித்துவரும்

## 'குளோபல் டீச்சர்'

# பீட்டர் டபிய்ச்சி



பள்ளியில் ஆசிரியர்கள் பலரிடம் கல்வி கற்றிருந்தாலும் அனைவருக்கும் பிடித்தமான ஆசிரியர் ஒருவர் இருப்பார். படிக்கும் காலம் முடிந்த பின்பும் அந்த ஆசிரியர் நமது நினைவில் எப்போதும் இருப்பார். அவர் மீதுள்ள பிரியத்தினால் அவரே சிறந்த ஆசிரியர் என மாணவர்கள் அவரது பெருமை குறித்துப் பேசுவர். இதே போல் உலகமெங்கும் உள்ள மாணவர்களுக்கும் அவர்களது பள்ளியில் சிறந்த ஆசிரியர் ஒருவர் இருப்பது இயல்பானது. அப்படிப்பட்ட சிறந்த ஆசிரியர் ஒருவர் உலகில் இருக்கிறார். அவர்தான் கென்யா நாட்டைச் சேர்ந்த அறிவியல் மற்றும் கணித ஆசிரியர் பீட்டர் டபிய்ச்சி.

கிறிஸ்துவத் துறவியான பீட்டர் டபிய்ச்சி, மிகவும் பின்தங்கிய பகுதியைச் சேர்ந்த மாணவர்களின் கல்விக்காகக் கடுமையாக உழைத்து வருகிறார். கென்யாவில் உள்ள தொலைதூரக் கிராமமான ப்வானி கிராமத்தில் இயங்கிவரும் கெரிகோ இரு பாலினர் மேல்நிலைப் பள்ளியில் 2016ஆம் ஆண்டு முதல் அறிவியல் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். கென்யாவின் பிளவுப் பள்ளத்தாக்குப் பகுதியான நக்ரு மாநிலத்தில் அதிகமான வறண்ட நிலங்களைக் கொண்ட பகுதியில் அமைந்துள்ளது கெரிகோ மேல்நிலைப் பள்ளி. மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள அந்தப் பள்ளியில் அடிப்படை வசதிகள் முற்றிலும் இல்லை.

வறுமையின் காரணமாக பீட்டர் டபிய்ச்சியின் குடும்பத்தில் இயல்பாகவே கல்வியின் மீதான தாக்கம் ஏற்பட்டிருந்தது. கென்யாவின் வறண்ட கிராமத்தில் பிறந்த பீட்டருக்கு இயல்பாகவே மாணவர்கள் மீதான அக்கறையைக் கல்வி கொடுத்ததாகத் தெரிவித்துள்ளார்.

கெரிகோ பள்ளிக்கு ஆசிரியராக பீட்டர் சென்றபோது, அப்பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் ஒரு கணினி மட்டுமே இருந்தது. மேலும் பள்ளியில் படிக்கும் மாணவர்களில் பெரும்பாலானோர் பெற்றோர் இல்லாதவர்களாகவும், ஒற்றைப் பெற்றோர் உடையவராகவும் இருந்தனர். மாணவர்களின் குடும்பத்தினர் 95 சதவிகிதத்தினர் அதிக வறுமையில் இருந்தனர். ப்வானி சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்த ஏழு பழங்குடியினப் பிரிவு மக்களின் குழந்தைகள் கெரிகோ பள்ளியில் படித்து வருகின்றனர். அப்பகுதி மழை பெய்தால் மோசமாகப் பழுதடையும் சாலைகளால் நிரம்பியிருந்தது.

ப்வானி கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு வறுமையைத் தாண்டி பல சிக்கல்கள் இருந்தன. அப்பகுதி வறண்ட பகுதி என்பதால் அடிப்படை வாழ்வாதாரத்திற்கே தினம் தினம் போராடும் சூழ்நிலையில் இருந்தனர். இதன் காரணமாக கெரிகோ பள்ளியில் படிக்கும் மாணவர்கள் கல்வியில் இடைநிற்றல், போதைப் பொருட்களுக்கு அடிமையாகுதல், பதின்பருவ கர்ப்பம், குழந்தைத் திருமணங்கள் மற்றும் மனஅழுத்தம் காரணமாகத் தற்கொலை செய்யும் மாணவர்கள் என இங்கு பல சமூகக் குழப்பங்களும் நிலவியது. ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து இதுபோன்ற பிரச்சினைகளைக் களைய பீட்டர் முயற்சி செய்து வருகிறார்.

## மாணவர்களின் வாழ்க்கையை மேம்படுத்திய பீட்டர்

உலகில் வெகுவேகமாக வளர்ந்துவரும் மக்கள் தொகையைக் கொண்ட நாடாக ஆப்பிரிக்கா உள்ளது. இங்கு பள்ளியில் படிக்கும் வயதுடைய குழந்தைகள் அதிகமாக உள்ளனர். 1.2 பில்லியன் மக்கள் தொகையில் 480 மில்லியனுக்கும் அதிகமாக 15 வயதுக்குட்பட்டவர்களே காணப்படுகின்றனர். இருப்பினும் அந்நாட்டில் இருக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் சமமான கல்வி வாய்ப்பு கிடைப்பதில் பல சிக்கல்கள் இருந்து வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் பீட்டர் அவரது மாணவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அவரது மாதச் சம்பளத்திலிருந்து 80 சதவிகிதத் தொகையை ப்வானி கிராமத்தின் உள்ளூர் சமூகத் திட்டங்களுக்கு நன்கொடையாக வழங்கத் தொடங்கினார்.

வகுப்பறையையும் தாண்டி அவரது அர்ப்பணிப்புப் பணி தொடர்ந்தது. அக்கிராமங்களில் தொடர்ந்து பஞ்சம் ஏற்படுவதை அறிந்து, பஞ்சத்தைக் கட்டுப்படுத்த அப்பகுதிகளுக்கு ஏற்ற பயிர்களை எப்படி வளர்ப்பது என்பதை உள்ளூர் மக்களுக்குக் கற்றுக்கொடுத்து வருகிறார்.

## பள்ளிப் பாடம் கற்பித்தலின் யுக்திகள்

படிப்பது மட்டுமே குறிக்கோள் எனப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் எண்ணுவதில்லை. சிலருக்குப் படிப்பதில் விருப்பம் இல்லாமலும் உள்ளது. இந்நிலையில் கற்றலுக்கான பல சிக்கல்கள் இருந்த ப்வானி கிராமத்தில் பீட்டர் பல யுக்திகளைக் கையாண்டு மாணவர்களுக்குக் கல்வி மீதான ஆர்வத்தை அதிகப்படுத்தினார். பீட்டர் கெரிகோ பள்ளிக்குச் சென்ற 2016ஆம் ஆண்டு பள்ளியில் 58 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற எண்ணிக்கையில் மட்டுமே இருந்தனர்.

இந்த நிலையில்தான் ஆசிரியர் பீட்டர் மாணவர்கள் திறனை வளர்க்கும் ஒரு குழுவைத் தொடங்கினார். அதன் மூலம் 60 சதவிகித மாணவர்கள் தேசிய போட்டித் தேர்வுகளுக்குத் தகுதி பெற்றனர். அதைத் தொடர்ந்து 2018ஆம் ஆண்டு கென்யா அறிவியல் மற்றும் பொறியியல் கண்காட்சியில் அவரது மாணவர்கள் பங்கேற்றனர். பார்வையற்றவர்கள் மற்றும் காது கேளாதவர்கள், பொருட்களை அளவிடுவதற்கு அவரது மாணவர்கள் கண்டுபிடித்த சாதனத்தை அவர் காட்சிப்படுத்தினர்.

இதில் கெரிகோ மாணவர்கள் அரசுப் பள்ளிகள் பிரிவில் தேசிய அளவில் முதலிடம் பிடித்தனர். இப்பள்ளியின் கணித அறிவியல் குழு, அமெரிக்காவின் அரிசோனாவில் 2019ஆம் ஆண்டு INTEL சர்வதேச அறிவியல் மற்றும் பொறியியல் கண்காட்சியில் பங்கேற்கத் தகுதி பெற்றது.

அறிவியல், கணித ஆசிரியரான பீட்டர் அப்பாடங்களில் குறைந்த மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்கு வார இறுதி நாட்களில் சிறப்பு வகுப்புகளை நடத்தி மாணவர்களின் சாதனை மற்றும் சுயமரியாதையை வியக்கத்தக்க முறையில் மேம்படுத்தினார். பல செயல்பாடுகள் மூலம் அப்பகுதி மாணவர்களின் வாழ்க்கைத் தரத்தை முற்றிலும் மாற்றி வருகிறார்.

2017ஆம் ஆண்டில் அப்பள்ளியில் பயின்ற 59 மாணவர்களில் 16 பேர் மட்டுமே கல்லூரிக்குச் சென்றனர். இந்த எண்ணிக்கை தற்போது கணிசமாக உயர்ந்து வருகிறது. மேலும் ஒழுக்கமின்மை வழக்குகள் வாரத்திற்கு முப்பதிலிருந்து வெறும் மூன்றாகக் குறைந்துள்ளது. பள்ளியில் மாணவர் சேர்க்கையும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

வறுமையான பின்னணியில் இருந்து படித்த பீட்டர் டபிய்ச்சி கெரிகோ பள்ளி மாணவர்களின் நிலையை முற்றிலுமாக மாற்றிவரும் சிறப்பான பணியைச் செய்து வருகிறார். இவரது அர்ப்பணிப்புக்காக 2019ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 'குளோபல் டீச்சர்' விருதைப் பெற்றுள்ளார்.

– சுகுணாதேவி



# நோபல் பரிசும் அதன் பின்னணியும்




அமைதியின் தூதுவராகவும் நல்லிணக்கத்தை விரும்புவராகவும் தற்காலத்தில் அறியப்படும் ஆல்பிரட் நோபல், 150க்கும் மேற்பட்ட வெடி பொருட்களைக் கண்டறிந்தவர்.

இவற்றில் அதிகமாக அறியப்படுவது டைனமைட். டைனமைட்டை விட சக்தி வாய்ந்த பல வெடி பொருட்களை ஆல்பிரட் நோபல் கண்டுபிடித்திருக்கிறார். அப்படியொரு ஆய்வின்போது நடந்த விபத்தில் தனது சகோதரரையும், பல தொழிலாளர்களையும் இழந்தார். பல நாட்டு அரசுகள் இவரது வெடி மருந்தைத் தடை செய்தபோதும், தலைமறைவாக இருந்து வெடி பொருட்களை உருவாக்கினார். அவற்றுக்குக் காப்புரிமை பெற்றதன் மூலம் பெரும் பணம் அவருக்குக் கிடைத்தது.

1888இல் நோபலின் சகோதரர் லுட்விக் மரணத்தின்போது, ஆல்பிரட் நோபல் இறந்துவிட்டதாகப் பல செய்தித்தாள்கள் செய்தி வெளியிட்டன. அதில் ஒரு பிரெஞ்சு இதழ் 'மரணத்தின் தூதர் இறந்துவிட்டார்' எனக் குறிப்பிட்டிருந்தது. மரணத்திற்கு முன்பாகவே தனது இரங்கல் குறிப்பைக் கண்ட நோபல், தான் சம்பாதித்த தனது சொத்து முழுவதையும் பொதுச் சேவைக்காகச் செலவு செய்வதென முடிவெடுத்து உயில் எழுதினார். அதில் கடைசி உயில் நோபல் பரிசைப் பற்றியது. 'தனது சொத்து மதிப்பில் 94 சதவிகிதம் இயற்பியல், வேதியியல், மருத்துவம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் பணியாற்றியவர்களுக்கு வழங்க வேண்டும்' எனக் குறிப்பிட்டிருந்தது.

1901ஆம் ஆண்டு முதல் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. 24 காரட் தங்கமுலாம் பூசப்பட்ட பதக்கம், பாராட்டுடன் கூடிய பட்டயம், 8 கோடி ரூபாய் பரிசுத்தொகை போன்றவை நோபல் பரிசு பெற்றவருக்கு வழங்கப்படும்.

1901ஆம் ஆண்டு முதல் 2022 வரை தனி நபர்களுக்கு 959 முறையும், நிறுவனங்களுக்கு 30 முறையும் நோபல் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

- **பா.த. சென்னம்மாள்** இடைநிலை ஆசிரியை,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, சந்திராபுரம்,
அரூர் ஒன்றியம், தருமபுரி.



எனது நூலகம் 5

# புத்தகங்களை அடுக்க அலமாரிகள் போதவில்லை



காவிரிக்கரையோரமாய் உள்ள ஒரு சிறிய ஊரில் பிறந்து வளர்ந்தேன்.

எனது பால்ய காலம் முழுமையும் அவ்வூரிலேயே பசுமையாய்க் கழிந்தது.

என் அப்பா எப்பவும் ஏதாவதொரு நூலை வாசித்துக்கொண்டே இருப்பார். அதைப் பார்த்துப் பார்த்துத்தான் எனக்குள்ளும் வாசிப்பின் ஆர்வம் துளிர்த்தது. ஆனால், அப்போது எனக்குப் புத்தகங்களை அடுக்கி அலமாரியில் வைக்க வேண்டும் என்பது தெரியவில்லை.

புத்தகங்களை அடுக்கி வைப்பது நூலகத்தில்தான் சாத்தியம் என்றே நினைத்திருந்தேன். அதனால் வீட்டில் கிடைக்கிற இடத்தில் புத்தகங்களை அடுக்கி வைப்பது எனது வேலையாக இருந்தது.

அம்புலிமாமா, பாலமித்ரா, ரத்னா, பூந்தளிர், கோகுலம், ராணி, பாக்யா, கல்கண்டு, குமுதம், ஆனந்த விகடன், ராணிமுத்து, தேவி, கண்மணி, மாலைமதி, குங்குமம், சிறுவர் மலர், தங்கமலர், வாரமலர், குடும்ப மலர், ஆன்மீக மலர் என ஒவ்வொருவருக்கும் வாசிப்பானது எப்படி ஆரம்பித்ததோ அதேபோலத்தான் எனக்கும் ஆரம்பித்தது. மாத, வார இதழ்களைப் படிக்க ஒவ்வொரு வீடாகச் சென்றது உண்டு.

நான் பயின்ற பள்ளிதான் என் அறிவுக்கண்ணைத் திறந்தது. என் ஆசிரியர்கள் வழியே இவ்வுலகத்தினைப் பார்க்கத் தொடங்கினேன். இன்றைய எனது அத்தனை ஆர்வத்திற்கும் விதை போட்டது என் பள்ளிதான்.

பள்ளி நூலகத்தில்தான் சிறுவர் கதைகள் அடங்கிய பல நூல்கள் அறிமுகம் ஆகி, இன்னுமின்னும் தேடிப் படிக்கின்ற ஆர்வத்தைத் தூண்டியது.

ஊரிலுள்ள படிப்பகத்தில் வழவழ தாளில் இருக்கிற புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தேன். நன்னெறிக் கதைகளும், நீதிக்கதைகளும், அறிவொளி இயக்கக் கதைகளுமாக என் வாழ்வில் இரண்டறக் கலந்தன.

இன்னும் இன்னும் வாசிக்க ஆரம்பித்த காலத்தில்தான் பல ஆளுமைகள் வாசிப்பின் வழியே அறிமுகம் ஆனார்கள். எஸ்.ராமகிருஷ்ணன், சுஜாதா, அம்பை, சு.வெங்கடேசன், வி.நக்கீரன், ஜெயமோகன், விழியன், மருதன், யெஸ்.பாலபாரதி, மு.முருகேஷ், M.R.C திருமுருகன், நா.முத்துக்குமார், K.V.ஷைலஜா, K.V.ஜெயஸ்ரீ, ராம் தங்கம், அ.வெண்ணிலா என வாசிப்பு விரிவாக அடுத்தடுத்த புத்தகங்களைத் தேடி வாங்க ஆரம்பித்தேன். திருமணம், குழந்தைகள் என்றானாலும் வாசிப்பின் மீதான காதல் குறையவே இல்லை. சொல்லப்போனால் இன்னும் அதிகமானது.

என் இணையரும் என் புத்தக வாசிப்பின் ஆர்வத்தை உணர்ந்து பல புத்தகங்களைப் பரிசளித்தார். புத்தகக் கண்காட்சிக்கு குடும்பமாகச் செல்வோம். என் வாழ்வின் ஆகச்சிறந்த மகிழ்வு தினமாக நான் கருதுவது அந்த நாளைத்தான்.

**ஆசிரியர்களே!**

உங்கள் வீட்டில் நீங்களும் நூலகம் அமைத்துள்ளீர்களா? அந்த நூலகம் அமைக்கும் எண்ணம் எப்போது வந்தது, உங்கள் சேமிப்பில் உள்ள நூல்களில் மிக முக்கியமானதாகக் கருதும் நூல்கள் பற்றியெல்லாம் சுவாரஸ்யமாக எழுதி அனுப்புங்களேன்!

'எனது நூலகம்', கனவு ஆசிரியர், மாத இதழ்
8வது தளம், ஈ.வி.கே.சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை – 6

இப்படியாகச் சேர்த்த என் புத்தகங்களை வீட்டு அலமாரியில் வைக்க ஆரம்பித்து. அது போதாமல் வேறொரு அலமாரியையும் வாங்கினோம். அதுவும் போதாது என இன்னொரு அலமாரி வாங்கினோம். இப்போது அதுவும் போதவில்லை. வாங்க வேண்டும் அடுத்த அலமாரியை.

வாடகை வீட்டில் இருந்தவரையில் இருக்கின்ற இடத்தில் புத்தகங்களை அடுக்கி வைத்தோம்.

எங்களுடைய மிகப்பெரிய கனவான சொந்த இல்லத்தில் படிப்பறை என்று ஒரு அறையைத் தனியே அமைக்க வேண்டும் என்பதாக இருந்ததை மெய்ப்பித்து இதோ எங்களின் சொந்த இல்லத்தில் எங்களுக்குத் தேவையான நூல்களை வைக்கும் அளவுக்கு ஒரு படிப்பறையை (Study Room) உருவாக்கினோம். இப்போது அங்கு என் ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு புத்தகத்துடன் பயணிக்கின்றேன். அந்த நூலகத்தில் சுமார் 3,500 புத்தகங்கள் உள்ளன. இந்த எண்ணிக்கையைப் புத்தகங்களுக்கும் எங்களுக்குமான நெருங்கிய தொடர்பாகப் பார்க்கின்றேன். படிக்கின்ற புத்தகங்களுக்கு மதிப்புரை எழுதிடவும் கற்றுக்கொண்டு 'சீர் திறனாய்வர்' என்கிற விருதையும் பெற்றுள்ளேன்.

எங்கள் மாவட்டத்தில் நடைபெற்ற 'புத்தகத் திருவிழா'வை ஒட்டி ஆசிரியர்களின் வீடுகளில் உள்ள நூலகங்களில் சிறப்பானதைத் தேர்வு செய்தனர். அதில் 'சிறந்த நூலகம்' என்று எங்கள் நூலகம் பாராட்டுச் சான்றிதழைப் பெற்றது. அதை எங்கள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வழங்கினார். அது மறக்க முடியாது நினைவு.

இதன் தொடர்ச்சியாக எங்கள் பள்ளியிலும் மாணவர்களுக்காக ஒரு நூலகத்தை அமைத்துள்ளோம். மாணவர்களின் பிறந்த நாளுக்கு அவர்களுக்குப் புத்தகங்களையே பரிசாக அளிக்கின்றோம்.

- **அ.அமலா,**
தலைமையாசிரியர் (பொ),
அரசு உ.நி.பள்ளி,
மாமண்டூர்,
ஆரணி ஒன்றியம்,
திருவண்ணாமலை






# மாணவர் எண்ணிக்கையை 10 மடங்கு உயர்த்திய ஆசிரியர்!

அரசுப் பள்ளி ஆசிரியர்கள் நினைத்தால் தம் பள்ளியை நாடறியச் செய்ய முடியும் என்பதற்கு பிராட்டியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து வருகிறது. அந்தப் பள்ளியின் தலைமையாசிரியர் ஆஷாதேவி தலைமையிலான ஆசிரியர் குழுவின் செயல்பாட்டால் திருச்சி மாவட்டம் மட்டுமல்லாது நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது அந்தப் பள்ளி.

இங்கு முதலில் 71 மாணவர்களே படித்து வந்தார்கள். தற்போது 800-க்கும் அதிகமான மாணவர்கள் படிக்கின்றனர். இத்தனை மாணவர்கள் அரசுப் பள்ளியின் பக்கம் ஈர்க்க அவர்கள் செய்த பணிகள்

ஏராளம். அதை அப்பள்ளியின் தலைமை ஆசிரியரே கூறுகிறார் கேளுங்கள்.

“திருச்சி மாவட்டத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவள் நான். குடும்பத்தினர் சொன்னதால் ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்து படித்தேன். நாளடைவில் ஆசிரியர் பணி மீது மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது.

1998ஆம் ஆண்டு ஆசிரியராக அரசுப் பள்ளியில் சேர்ந்தேன். 2003ஆம் ஆண்டு தலைமை ஆசிரியராக உயர்வு பெற்றேன். 2010ஆம் ஆண்டு முதல் பிராட்டியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பொறுப்பில் உள்ளேன்.

என் பள்ளி அமைந்திருக்கும் பகுதியில் நிறைய குழந்தைகள் இருந்தும், பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. அதற்கான காரணத்தை அப்பகுதி மக்களிடம் கேட்டு அறிந்தபோது, அவர்களில் பலர், தங்கள் குழந்தைக்கு ஆங்கிலவழிக் கல்வி வேண்டும் எனக் கூறினார்கள். பள்ளியில் ஆங்கிலவழிக் கல்விக்கு அனுமதி கோரி அரசிடம் விண்ணப்பித்தேன். 2013ஆம் ஆண்டு எங்கள் பள்ளியில் ஆங்கிலவழிக் கல்விக்கான அனுமதி கிடைத்தது. பள்ளியில் ஆங்கிலம் பேசுவதை அவசியமானதாக மாற்றினேன். ஆசிரியர் மாணவர்களோடும், மாணவர்கள் ஆசிரியரோடும் ஆங்கிலத்தில் உரையாடும் சூழலை உருவாக்கினோம். மெல்ல மெல்ல மாணவர்களின் வருகை அதிகரிக்கத் தொடங்கியது.

பள்ளிக்கு வருவதாலேயே மாணவர்களின் வாழ்க்கை முன்னேறிவிடும் என நான் நம்பவில்லை. அவர்களுக்கு கல்வியுடன் அவர்களின் தனித் திறனையும் ஊக்குவிக்க வேண்டும். கலை சார்ந்தும் மாணவர்கள் இயங்க வேண்டும். எனவே பள்ளியில் இசை வகுப்பு, சிலம்பப் பயிற்சி, யோகா, கராத்தே வகுப்பு என கட்டணமில்லா இலவச வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்தோம்.

நாம் என்ன செய்தாலும், விளம்பரம் இருந்தால்தான் பள்ளியின் சிறப்புப் பற்றிப் பலரிடம் கொண்டுசேர்க்க முடியும். எனவே பள்ளியைச் சுற்றி 10 கி.மீ. தூரத்துக்கு விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டினோம், ஆட்டோக்களில் விளம்பரம் செய்தோம், உள்ளூர்த் தொலைக்காட்சி, வானொலியில் விளம்பரம் கொடுத்தோம். இப்படிப் பல முயற்சிகள் செய்த பிறகே மாணவர்கள் வருகை அதிகமானது.

ஆங்கிலவழிக் கல்வியில் அதிகமான மாணவர்கள் சேர்ந்து படிக்கின்றனர். கற்றலில் பின்தங்கிய மாணவர்களுக்கு மாலை நேரப் பயிற்சி வகுப்பு எடுக்கப்படுகிறது. அரசு உதவிகளை மாணவர்கள் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருகிறோம். என்னுடைய செயல்பாடுகளுக்கு ஆசிரியர்களும் உறுதுணையாக இருக்கின்றனர். ஆரம்பத்தில் நான்கு ஆசிரியர்களே இருந்தனர், தற்போது 26 ஆசிரியர்கள் பணியில் இருக்கிறார்கள்.

எங்கள் பள்ளி மாணவர்கள் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பரிசுகளை வென்றுள்ளனர். இதனால் திருச்சியில் பலரும் அறிந்த அரசுப் பள்ளியாக எங்கள் பள்ளி திகழ்கிறது. இதில் ஊடக நண்பர்களின் பங்கு முக்கியமானது. எங்களுக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகின்றனர்.

எங்கள் பள்ளியின் மற்றொரு சிறப்பம்சம் அதன் உள்கட்டமைப்பு. பஞ்சாயத்து யூனியன் பள்ளியாக இருந்தாலும், பள்ளி நகராட்சி எல்லைக்குள் வருகிறது. எனவே நகராட்சியிடம் பேசி சிறப்பான உள்கட்டமைப்பைப் பெற்றோம்.

நான்கு ஸ்மார்ட் வகுப்பறைகள், குழந்தைகளுக்கான வகுப்பறை, ஆர்.ஓ. குடிநீர் வசதி, தூய்மையாகப் பராமரிக்கப்படும் கழிவறைகள், பாதுகாப்பான மதில் சுவர்கள் எனப் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

மேலும் 12 ஸ்மார்ட் வகுப்பறைகளுக்கான கட்டுமானப் பணிகள் அரசு உதவியுடன் நடைபெற்று வருகிறது. இப்படி அரசு





















உதவியுடனோ, அரசு சாரா தனியார் அமைப்பின் உதவியுடனோ எங்கள் பள்ளிக்குத் தேவையானவற்றைக் கேட்டுப் பெறுகின்றோம். இதனால் அனைத்து வசதிகளும் இங்கே உள்ளன.

பள்ளி நேரம் கடந்த பின்பும் மாணவர்களுடன் நேரம் செலவழிக்க எங்கள் ஆசிரியர்கள் தயங்குவதில்லை. மாணவர்களுக்குத் தேவையான உதவியும், பொருளாதார ரீதியாகவும் பங்களிப்பு செய்கிறார்கள். அதேபோல் மாணவர்களின் பெற்றோரும் பள்ளியின் மீது அக்கறையோடு இருக்கிறார்கள்.



மகள், மகனுடன் ஆஷா தேவி

## கொரோனா காலச் செயல்பாடுகள்

கொரோனா காலத்தில் மாணவர்கள் சரியான கல்வி பெற முடியாமல் தவித்தனர். அப்போது, ஆன்லைன் கல்வியை மேம்படுத்தினோம். ஆன்லைன் வகுப்பில் பங்குபெற முடியாத சூழலில் இருக்கும் மாணவர்கள் மீது என் கவனம் இருந்தது. அவர்களும் கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. எனவே அது போன்ற மாணவர்களைப் பட்டியலிட்டு, ஆசிரியர்களே அவர்களைத் தேடிச் சென்று பாடம் நடத்த ஏற்பாடு செய்தோம். இந்த விஷயத்திலும் எங்கள் ஆசிரியர்கள் மிகுந்த ஆதரவாக இருந்தனர்.

என் கணவர் தமிழ்ச்செல்வன் எனது செயல்பாடுகளுக்குப் பக்கபலமாக இருக்கிறார். மாணவர்களுக்குச் சில நேரங்களில் சிறப்பு வகுப்புகளை முடித்துவிட்டு வீட்டுக்குச் செல்ல இரவு நேரமாகிவிடும். அப்போது என் குடும்பத்தினர் ஆதரவாக இருக்கின்றனர். எனது நீண்ட பயணத்தில் குடும்பத்தின் பங்களிப்பை மிக முக்கியமானதாகக் கருதுகிறேன்.

மாவட்ட, மாநில அளவிலான நல்லாசிரியர் விருதுகளைப் பெற்றுள்ளேன். 2021ஆம் ஆண்டு தேசிய நல்லாசிரியர் விருதும் கிடைத்தது. இது போன்ற விருதுகள் என் செயல்பாடுகளை மேலும் அதிகப்படுத்துகிறது. மாணவர்களின் நலனுக்காக இன்னும் உழைக்க வேண்டும் என்ற உத்வேகத்தை அளிக்கிறது.

நான் விருது பெற்றது மட்டும் மகிழ்ச்சி அல்ல, எங்கள் பள்ளிக்கும் பல்வேறு விருதுகள் கிடைத்துள்ளன. 2011ஆம் ஆண்டு மாவட்ட அளவில் சிறந்த பள்ளிக்கான விருதைப் பெற்றோம். எங்கள் மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளையும் விருதுகளையும் அள்ளிக்கொண்டு வருகின்றனர். அது இன்னும் மகிழ்ச்சி அளிக்கிறது.

## லட்சியக் கனவு

சிறப்பாகச் செயல்பட்டுவரும் எங்கள் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதே எனது லட்சியம், கனவு என்று சொல்லலாம்.

எனக்கு இன்னும் பணி ஓய்வு பெற ஆறு ஆண்டுகள் உள்ளன. அதற்குள் என் கனவை நனவாக்குவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் அதைச் செய்ய முடியாமல் போனாலும் ஓய்வு பெற்ற பின்பும் அதற்கான பணிகளை நிச்சயம் மேற்கொள்வேன்" என்று நெகிழ்ச்சியுடன் தான் கடந்துவந்த பாதையை நம்முடன் பகிர்ந்துகொண்டார் ஆஷா தேவி.

– பாண்டியன்

# வாழ்ந்து காட்டுதலே முதன்மைக் கல்வி

**மாணவர்களுக்குக் கற்றுத் தரப்படும் கல்வி எவ்வாறு அவர்களது எதிர்காலத்தைக் கட்டமைக்கிறது என்றும், வகுப்பறையில் மாணவர்கள் எவ்விதம் கல்வியைப் பெறுகிறார்கள் என்பது தொடர்பாகவும் நூலாசிரியரின் அனுபவத் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.**

ஒரு பள்ளிக்கூடம் என்பது கட்டடங்களால் பெருமையடைவதில்லை. அங்கு பணிபுரியும் தன்னலமில்லா ஆசிரியர்களாலும், எதிர்காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அனைத்து நற்பண்புகளையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடனும் அங்கே வருகை தரும் மாணவச் செல்வங்களாலும் சிறப்படைவதே பள்ளிக்கூடங்கள்.

கல்வி என்பதை ஏட்டுச்சுரைக்காய் போல வெறுமனே கற்றுத் தராமல், மனித மாண்புகளான ஒழுக்க நெறி, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தேசப்பற்று, ஏழ்மை நிலையைக் கண்டு மனம் தளராமல் போராடும் பாங்கு, சக மாணவர்களை மதிக்கும் பண்பு போன்ற குணங்களைச் சில ஆசிரியர்கள் கற்றுத் தந்தும் சிலர் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியும் கட்டமைத்த அருமையான தருணங்களை ஆழமாகவும் அறிவுபூர்வமாகவும் உணர வைக்கிறார் ஆசிரியர் தட்சணாமூர்த்தி.

ஆசிரியர் பணியில் தாம் பெற்ற அனுபவங்களை எளிய மொழியில் எழுதி, நூலின் வழி வாசிக்கும் நமக்குக் கடத்துகிறார். அதோடு கற்றுத் தருதல் என்பதைத் தாண்டி வாழ்ந்து காட்டுதல் என்ற நிலையே மாணவர்களைக் கல்வியில் முழுமையாக ஈடுபடுத்துவதில் முதன்மை வகிக்கிறது என்பதோடு சில இடங்களில் ஆசிரியர்களின் மோசமான சில போக்குகளையும் விமர்சனம் செய்கிறார்.

இப்படி வகுப்பறைச் சிக்கல்களை விவரிக்கும் நூல் ஆசிரியர், தான் மற்றவர்களிடமிருந்து விலகி, எத்தகு ஆசிரியராக மாணவர்களுக்கு விளங்கினார் என்பதையும் நமக்கு அறியத் தருகிறார். இன்றைய நிலையில் ஆசிரியராகப் பணிபுரியும் ஒவ்வொருவரும் சந்திக்கும் பிரச்சினைகளை விவரித்து, அவற்றை எவ்விதம் அணுகி மாணவர்கள் மனதில் இடம் பிடிப்பது என்பதையும் அறியத் தருகின்றன இக்கட்டுரைகள்.

– **கி. சிவஞானம்**, பட்டதாரி ஆசிரியர்,
அ. உ.நி. பள்ளி, குப்பம்பாளையம், திருப்பூர்






# நாளைய கனவை நனவாக்குவோம்!

“அடக்குமுறைகள் நிறைந்த சமுதாயத்தில் பெண்களின் குரல் முக்கியமானது, அதனை நாம் ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணிற்கும் தரமான இலவசக் கல்வியைப் பெறுவதற்கு உரிமை உள்ளது. அதை அவர்களுக்குக் கிடைப்பதற்கான வழியை உருவாக்கித் தர வேண்டும். அவர்களில் ஆயிரக்கணக்கான மலாலாக்கள் இருப்பதாக நான் நினைக்கிறேன்.

வாழ்க்கை என்பது ஆக்ஸிஜனை உட்கொள்வதும் கார்பன் டை ஆக்சைடை வெளியிடுவதும் மட்டுமல்ல. இப்போது நமது எதிர்காலத்தை உருவாக்குவோம், நாளைய கனவுகளை நனவாக்குவோம்.”

**- மலாலா யூசப்சாய்**

*அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்.*



# என்.சி.சி.யில் நாடகம் நடித்தோம்!

**- ஆர்.பாண்டியராஜன்**

'கன்னிராசி' திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான இவருக்கு தனியே அறிமுகம் தேவை இல்லை. முப்பத்தி ஏழு ஆண்டுகளுக்கும் மேலாகத் திரைப்படத்துறையில் தன் முத்திரையைப் பதித்துவரும் இவர், அஞ்சல் வழியில் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தார். 'தமிழ் திரைப்படக் கலைஞர்களின் சமுதாயப் பங்களிப்பு' என்னும் தலைப்பில் தனது முனைவர் பட்ட ஆய்வையும் முடித்துள்ளார். அவர் தன் பள்ளிக்கால அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்கிறார்.

"சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள மாதிரி உயர்நிலைப் பள்ளியில்தான் படித்தேன். எங்கள் பள்ளியை வெளியில் இருந்து பார்க்கும்போது பெரிய பெரிய தூண்களோடு பிரம்மாண்டமாகப் பெரிய மியூஸியம் மாதிரியே இருக்கும். பாரம்பரியமான பெரிய கட்டடத்தில் உள்ளது.

நான் எப்போதுமே நடு பெஞ்ச் மாணவன்தான். குறும்பு கூடவே பிறந்தது. தமிழாசிரியர் கல்யாணவரதன் என் முகத்தைப் பார்த்து "கவனம் எங்கடா இருக்கு? முண்டக்கண்ணை முழிச்சி முழிச்சி பார்க்கிறே?" என்று சரியாகக் கண்டுபிடித்துக் கேட்பார்.

எங்க பள்ளியில ஒரே ஒரு செக்ஷன்தான் கோஎஜுகேஷன் இருந்தது. அந்த வகுப்புக்கு யார் யார் போவது என்பதை ஒரு வாத்தியார்தான் முடிவு பண்ணுவார். அப்ப அந்த செக்ஷன்லயே நான்தான் கொஞ்சம் உயரம் கம்மி. இருந்தாலும் இன்னும் உயரம் குறைவா காட்டுறதுக்காக இன்னும் கொஞ்சம் குனிந்து நிற்பேன். அந்த வாத்தியார் என்னை ஓகே பண்ணிட்டாரு. ஒரே சந்தோஷம். அதே நேரத்தில் பயமும் இருந்தது. அந்த வகுப்புல போய் வீட்டுப் பாடம் எழுதலன்னு வாத்தியார் கூப்பிட்டு கேட்டாருன்னா என்ன பண்றது? தலைமுடியைப் பிடித்து ஆட்டுவாரே! தனியா இருந்தாலும் பரவாயில்லை. பெண்ணுங்க முன்னால இப்படி நடந்தா அவமானமா போயிடுமேன்னு பயந்தேன். நல்லபடியா அதுமாதிரி எதுவும் நடக்கலை.

வகுப்பில் கேலி, கிண்டல், குறும்பு பண்றது எல்லாமே என்கிட்ட இருக்கும். அடுத்தவங்க ஜாமென்ட்ரி பாக்ஸை திறந்தால், அதில் மாங்காய் துண்டு,



நெல்லிக்காய், கலாக்காய் எல்லாம் இருக்கும். அதை நைஸாக எடுத்துச் சாப்பிட்டு விடுவேன். பொண்ணுங்க பார்த்திட்டு திட்டுங்க.
வாத்தியார்கிட்ட சொல்றேன்னு சொல்லுங்க. சிரிச்சுக்கிட்டே 'போய் சொல்லு'ன்னுவேன். ஆனால் சொல்லாமாட்டாங்க. அதற்காக ஆசிரியர்களிடம் அடி வாங்குகிற அளவுக்குப் போகமாட்டேன். ஆசிரியர்களுக்குத் தெரியாத அளவுக்கு மாணவர்களுடன் நையாண்டி செய்வேன்.
ஆசிரியர்களே நாங்கள் செய்கிற நையாண்டியைப் பார்த்து "யாருடா அது?" என்று கேட்டுச் சிரிப்பார்கள். எல்லா ஆசிரியர்களும் எங்களுடன் ரொம்ப நட்போட பழகினாங்க.



தங்கைகள் பெற்றோருடன்



நடிகர் முத்துராமனுடன்

'மனைவி ரெடி' என்கிற என் சொந்தப் படத்தை நான் படித்த பள்ளியிலேயே எடுத்தேன். எந்த நாற்காலியில் உட்கார்ந்து படித்தேனோ அதே நாற்காலியில் உட்கார்ந்து நடித்தேன். மரத்தடியில் சாப்பிட்ட இடத்திலேயே சில காட்சிகளை எடுத்தேன். படப்பிடிப்பு நடக்கும்போது எல்லா ஆசிரியர்களும் வந்து 'உனக்கு உதவி ஏதாவது வேண்டுமா?' என்று கேட்டுக் கேட்டு உதவி செய்தார்கள். அதை மறக்கவே முடியாது.

பள்ளிக் கால நண்பர்களான கல்யாணசுந்தரம், ரவியின் நட்பு இன்றைக்கு வரைக்கும் தொடருது. நான் இரண்டு நாள் வெளியூர் போனால் கல்யாணசுந்தரம் என்னோட வந்துடுவார். பழைய நினைவுகளை அசை போடுவோம். எதிர்காலத்தில் இப்படியெல்லாம் திருப்பம் நடக்கும் என்று பள்ளிக் காலத்தில் எனக்குத் தெரியாது.

9ஆம் வகுப்பில் என்.சி.சி.யில் இருந்தேன். அந்த உடையைப் போட்டால் மிடுக்காகத் தெரியும். நடக்கும்போது ஸ்டைலா இருக்கும். அதோடு நாலு இட்லி, வடை, பூரி கிழங்கு கொடுப்பாங்க. அதுக்காகவும் போனேன். வறுமையில் கிடைத்த பெரிய சந்தோஷம் என்.சி.சி. ஆனால் அங்கு போனதுக்குப் பிறகு ஓர் அதிர்ச்சி. என்.சி.சி. உடை கொடுத்தாங்க. அது பிட்டிங்கா இருந்தாதான் லுக்கா இருக்கும். ஆனால் நான் அந்த உடையைப் போட்டபோது ஆஃப்பேன்ட் பாவாடை மாதிரியும் சட்டையில் இரண்டு பேரு புகுந்துக்கிற மாதிரியும் தொள தொளன்னு இருந்துச்சு. எல்லோரும் கிண்டல் செய்தனர். அப்புறம் அந்த ஆடையை பாதி அளவுக்குப் பிடிச்சு தைச்சுதான் போட்டேன். அதில் காலையில் நாலு மணிக்கெல்லாம் எழுந்திருக்கணும். இந்த நல்ல ஒழுக்கத்தை அங்கேதான் கத்துக்கிட்டேன்.

எங்கள் பள்ளியில் நடந்த என்.சி.சி. கேம்ப்ல சுற்றுவட்ட பல பள்ளிகளில் இருந்தெல்லாம் நிறைய மாணவர்கள் வந்திருந்தார்கள். இறுதி நாளில் ஒவ்வொரு துறையிலும் வென்றவர்களுக்குப் பரிசுக் கோப்பை வழங்கினார்கள். எங்கள் பள்ளியில் நடந்த போட்டியில் நாங்கள் எந்தப் பரிசையும் வாங்கவில்லை. மனசு ரொம்ப வேதனையா ஆகிடுச்சு. எங்கள் ஆசிரியர்கள் ஜெயபால், சுப்புராஜ் ரெண்டு பேரும் ரொம்ப சோகமா இருந்தாங்க.

அந்த கேம்ப் முடிகிற அன்றைக்கு இந்தப் பசங்களை வைத்து நாடகங்கள் நடத்தலாம் என்று யோசித்தார்கள். அதில் நாங்களும் போய் கலந்துக்கிட்டோம். அப்போது எங்கள் மாணவர்கள் "இவன்தான் நிறைய நாடகங்கள் பார்த்திருக்கான்" என்றார்கள். படிக்கும்போது நான் சில நாடகங்களில் நடித்திருக்கிறேன். அதனால் நான் ஒரு நாடகத்தை எழுதி என் நண்பன் கணேசனுடன் சேர்ந்து 'பட்டு மாமி - கிட்டு மாமா' என்கிற ஒரு நாடகத்தைப் போட்டோம்.

விழா முடிவில் எல்லா பள்ளிகளிலிருந்து வந்தவர்களும் பரிசுகளை வாங்கினார்கள். எங்கள் பள்ளியில் நடக்கிற விழாவில் எங்களுக்கு என்.சி.சி.யிலும் பரிசு கிடைக்கவில்லை, நாடகத்திலும் கிடைக்கவில்லையே என்று நினைத்திருந்தபோது திடீர்னு ஒரு அறிவிப்பு.

இந்த வருஷம் புதுசா ஒரு ரோலிங் கப் அறிவிக்கிறோம். அது வெரைட்டி என்டர்டெய்ன்மென்ட் கோப்பை. அது சைதாப்பேட்டை மாடல் உயர்நிலைப் பள்ளிக்கு வழங்கப்படுகிறது. கூடுதலாக இன்னொரு அறிவிப்பு. இந்த நாடகத்தில் நடித்த பாண்டியனுக்குச் சிறந்த காமெடியன் பரிசு வழங்கப்படுகிறது என்று ஒரு மெடல் கொடுத்தார்கள். அதுதான் நான் சினிமாவுக்கு வர அஸ்திவாரம். 'நம்மைப் பார்த்தும் கைதட்டி சந்தோஷப்படுவார்கள்' என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

'ஆண் பாவம்' படத்தின் வெற்றிக்குப் பிறகு என் கல்யாணம் சிறப்பாக ஏற்பாடானது. கல்யாணப் பத்திரிகையை என் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் கொடுத்து அழைத்தேன். அத்தனை ஆசிரியர்களும் வந்து வாழ்த்தினார்கள். அன்று திருமணத்திற்கு தமிழகத்தின் முக்கிய பிரபலங்கள், நடிகர்கள் அனைவரும் வந்திருந்தது மகிழ்ச்சி. அதேநேரம் என் வளர்ச்சியை என் ஆசிரியர்கள் வந்திருந்து பார்த்து வாழ்த்தினார்களே அதைத்தான் என் வாழ்நாளில் கிடைத்த பெரிய பேறாகக் கருதுகிறேன்.



Yidan Prize
一丹獎

# ‘யிடான்’ பரிசை வென்ற முதல் ஆசியப் பெண்

கல்வி முன்னேற்றத்தில் சிறந்த பங்களிப்பைச் செலுத்துபவர்களுக்கு உலகளவில் பல்வேறு விருதுகள், பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றுதான் யிடான் பரிசு (Yidan Prize). பரிசு பெறுபவர்களுக்கு இந்திய மதிப்பில் 28 கோடி ரூபாய் வழங்கப்படும். கல்விப் பணிக்கு வழங்கப்படும் உயரிய பரிசாக இது கருதப்படுகிறது.

2016ஆம் ஆண்டு சீன நாட்டுக்காரரான சென் யிடான் (Chen yidan) என்பவர் இதை நிறுவினார். அவரது பெயராலேயே இப்பரிசு வழங்கப்படுகிறது. 2021ஆம் ஆண்டு இந்தப் பரிசைப் பெற்றவர் பிகார் மாநிலத்தைச் சேர்ந்த ருக்மணி பானர்ஜி எனும் இந்தியர். ஆசியாவிலேயே இந்தப் பரிசை பெற்ற முதல் பெண் இவர்தான். குழந்தைகளின் கற்றல் திறனை மேம்படுத்தும் ஆய்வுக்காக அவருக்கு இப்பரிசு வழங்கப்பட்டது.

பிரதம் எனும் கல்வி அறக்கட்டளையைத் தலைமை ஏற்று நடத்திவரும் ருக்மணி, ஒரு பொருளாதார அறிஞர். டெல்லியில் உள்ள புனித ஸ்டீபன் கல்லூரியில் (St. Stephen college) இளங்கலைப் பொருளாதாரப் படிப்பை முடித்தார். அதன்பிறகு டெல்லியின் பொருளாதாரப் பள்ளியில் (Delhi School Of Economics) முதுகலைப் பட்டம் பெற்றார். ரோட்ஸ் உதவித் தொகையால் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு படித்தார்.

பொருளாதாரத் துறையைத் தேர்ந்தெடுத்தாலும், அவர் மனம் அதில் நிலை பெறவில்லை. முனைவர் பட்டம் பெற சிகாகோவில் உள்ள ஜான் டூயி பல்கலைக்கழகத்தில் விண்ணப்பித்தார். அங்குதான் இவரது வாழ்க்கையில் திருப்புமுனை ஏற்பட்டது.

ஜான் டூயி பல்கலைக்கழகம் ஒரு கணிதப் பாடத் திட்டத்தைக் கொண்டுவந்து, அதை அந்தப் பகுதியில் உள்ள பள்ளிகளில் பயிற்றுவிக்க முடிவு செய்தது. பணத் தேவைக்காக அங்கிருக்கும் பள்ளிக்கு ஆசிரியராகச் சென்ற ருக்மணிக்கு, மாணவர்கள் குறித்த புரிதல் கிடைத்தது.

ஆப்பிரிக்க - அமெரிக்க குழந்தைகள் பயிலும் அரசுப் பள்ளி ஒன்றில் பாடம் நடத்தினார். குறைந்த சலுகைகளைப் பெறும் அம்மாணவர்களின் நிலையைக் காணும்போது, இந்தியாவில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நிலையைச் சிந்திக்கத் தொடங்கினார். இந்தச் சிந்தனை அவரை மீண்டும் இந்தியாவுக்கு அழைத்துவந்தது.

டெல்லி வந்த அவர், மூன்று ஆண்டுகள் 30 மாநகராட்சிப் பள்ளிகளை ஆய்வு செய்தார். சமூகச் செயற்பாட்டாளர் ஜான் டிரேஸ் உடன் பணியாற்றும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. இதில் கிடைத்த அனுபவங்கள் அவரது எதிர்காலப் பணிகளுக்கு அடித்தளமாக அமைந்தன.

1996ஆம் ஆண்டு பிரதம் கல்வி அறக்கட்டளையோடு இணைந்து பணிபுரியத் தொடங்கினார். 2005ஆம் ஆண்டு இந்தியாவின் கல்வி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்க முன்னோடியாக விளங்கியது பிரதம் குழு. இந்தியாவில் உள்ள கிராமப்புற மாவட்டங்களில் 100 நாட்கள் கணக்கெடுப்பு நடத்தி இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டது. அது அளித்த தகவலின்படி, பல ஆண்டுகள் பள்ளிக்கு வந்த மாணவர்கள் சிலருக்கே சரியாக வாசிக்கவோ, கணக்கு போடவோ தெரியவில்லை.

இந்தக் கற்றல் குறையைத் தீர்க்க, ருக்மணியின் பிரதம் அறக்கட்டளை பல்வேறு மாநில அரசுகளோடு இணைந்து பணியாற்றியது. சரியான அளவில் கற்பித்தல் (TaRL - Teaching at the Right Level) எனும் முறையை வகுத்து மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த



விரும்பினார் ருக்மணி. இந்த முறையில், ஆசிரியர்கள் மதிப்பெண் அடிப்படையில் மாணவர்களை மதிப்பிடாமல் அவர்களின் செயல்பாடுகள், கற்றல் அளவை கணக்கில் கொண்டு அவர்களைக் குழுக்களாகப் பிரிக்க வேண்டும். பின்னர் கற்றல் அளவை மேம்படுத்த உதவ வேண்டும்.

வாசிப்புத் திறனை அதிகரிப்பதோடு, கணிதத்திலும் மாணவர்களைச் சிறந்து விளங்கச் செய்யப் பயிற்சிகள் வழங்கப்படும். அரசுப் பள்ளி மாணவர்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்திய ருக்மணி, பல மாநில அரசுகளோடு பேசி தங்கள் அறக்கட்டளையின் பணியை விரிவுபடுத்தினார்.

தற்போது சரியான அளவில் கற்பித்தல் (TaRL) முறை இந்தியாவைத் தாண்டி தெற்கு ஆசியா, ஆப்பிரிக்காவின் சில பகுதிகளிலும் பரவியிருக்கிறது. மழலையர் பள்ளிகளிலும் பிரதம் அறக்கட்டளை கல்விப் பணிகளை மேற்கொள்கிறது.

கல்வியில் மிகச் சிறப்பான பங்களிப்பைச் செலுத்தியவர்களை கௌரவிக்கும் விதமாக, 2008ஆம் ஆண்டு பிகார் அரசு மௌலானா அபுல் கலாம் பெயரில் விருது அறிவித்தது. அதை முதலில் பெற்றவர் ருக்மணிதான்.

'அனைத்து குழந்தைகளும் பள்ளியில் இருக்க வேண்டும்; நன்றாகக் கற்க வேண்டும்' என்பதுதான் ருக்மணி தலைமை ஏற்று நடத்தும் பிரதம் அறக்கட்டளையின் குறிக்கோள். 'கல்வியின் தரத்துக்கே முதன்மை, மாணவர்கள் சேர்க்கைக்கு அல்ல' என்பதை மூச்சாகக் கொண்டு இயங்குகிறது ருக்மணியின் குழு.

ருக்மணி போன்றவர்களால்தான் நாம் கல்வியில் அடுத்த கட்டத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம். •






# ஊரும் பெருமையும் உணர்த்திடும் குறியீடு

சேலம் என்றாலே நம் அனைவர் மனதிலும் முதலில் நினைவுக்கு வருவது மாம்பழம்தான். அதுபோலவே பல்வேறு ஊர்களில் பலவிதமான பொருட்கள் பிரபலம். மதுரைக்கு மல்லி, திண்டுக்கல்லுக்குப் பூட்டு, காஞ்சிக்குப் பட்டு என அனைத்தும் அந்தந்த ஊர்களில் மட்டுமே உற்பத்திச் செய்யப்படுகிறது. மற்றும் விளைவிக்கப்படுகிறது.

இத்தகைய பெருமையைச் சேர்க்கும் பொருட்களுக்கு அங்கீகாரம் அளிக்கவும், அப்பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழிலாளர்களுக்குப் பயனளிக்கவும் அரசால் கொண்டுவரப்பட்டதுதான் புவிசார் குறியீடு அங்கீகாரம்.

புவிசார் குறியீடு என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தையோ, நாட்டையோ சார்ந்த, தனித்தன்மை வாய்ந்த பொருட்களுக்கு வழங்கப்படும் குறியீடு. இதன் மூலம் அப்பொருளின் போலி உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடுக்க முடியும் என உலக நாடுகள் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

## புவிசார் குறியீடு என்றால் என்ன?

ஒரு குறிப்பிட்ட இடத்தில் விளையக்கூடிய பொருட்கள் அல்லது தயாரிக்கக்கூடிய பொருட்களின் தரம், அப்பகுதியின் காலநிலை, நிலம், நீர் மற்றும் அதன் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தே புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கப்படுகிறது. மேலும் ஒரு பொருள் உருவான இடத்தையும், அதன் சிறப்பையும் பின்வரும் காலங்களில் அனைவரும் எளிதாக அறிந்து கொள்வதற்காகவும் புவிசார் குறியீடு பாதுகாப்புச் சட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

முதன்முதலாக உலக அளவில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரான்ஸ் நாட்டில் விளையக்கூடிய விவசாயப் பொருட்களுக்கு இந்தப் புவிசார் குறியீடு (Geographical Indication) வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திய அரசு 1999ஆம் ஆண்டில் புவிசார் குறியீடு மற்றும் பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்தியது. இதனைத் தொடர்ந்து 2003ஆம் ஆண்டிலிருந்து இச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. புவிசார் குறியீடு பாதுகாப்புச் சட்டத்தின்படி ஒவ்வொரு ஊருக்கும் அவ்வூரின் சிறப்பான விஷயத்திற்குப் புவிசார் குறியீடு வாங்கிக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஒன்றிய அரசின் வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைத் துறை ஆகியவை இணைந்து புவிசார் குறியீடை வழங்குகின்றது. இதன் அடிப்படையில் இச்சட்டம் அமல்படுத்தப்பட்டதில் இருந்து தற்போது வரை ஏறத்தாழ 3,200க்கும் அதிகமான பொருட்களுக்குப் புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் 45 பொருட்களுக்கு இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்தியாவில் முதன்முதலாக டார்ஜிலிங் தேயிலைக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.

## புவிசார் குறியீடு வழங்கப்படுவதன் பயன்கள்

ஒரு பொருளுக்குப் புவிசார் குறியீடு வழங்குவதன் மூலம் அப்பொருள் உற்பத்தியாகும் பகுதியைத் தவிர வேறு பகுதியில் அதே பொருளை உற்பத்தி செய்ய முடியாது. மேலும் அப்பகுதியின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் முடியும். அப்பொருளின் போலிகள் தயாரிக்கப்படுவதும் தடுக்கப்படும்.

உதாரணமாக, ஸ்ரீ வில்லிபுத்தூர் பால்கோவாவை ஸ்ரீவில்லிபுத்தூர் மக்கள்தான் தயாரிக்க முடியும். அதைத் தவிர வேறு ஊர்களில் ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவாவைத் தயாரித்து விற்க முடியாது. இதன் மூலம் அந்த ஊர் தொழிலாளர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அதுமட்டுமன்றி அப்பொருளின் ஏற்றுமதியும் அதிகரிக்கும். இதனால் உற்பத்தி பெருகும். அப் பொருளுக்கும், அவ்வூர் மக்களுக்குமான வரலாற்றுப் பிணைப்பு மாறாமல் பாதுகாக்கப்படும்.

## புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கும் முறை

இந்தியாவில் புவிசார் குறியீடு பெறத் தகுதியுடைய பொருட்களுக்குத் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் மூலம் விண்ணப்பிக்கலாம். இந்திய புவிசார் குறியீடு பாதுகாப்புச் சட்டம் 2(1)(e) இன் கீழ் GI இன் வரையறையின் வரம்பிற்குள் விண்ணப்பிக்கக் கூடிய பொருள் உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். ஒரு பொருளைத் தயாரிக்கும் உற்பத்தியாளர்களின் நலனைத் தயாரிப்பாளர்கள் சங்கம் அல்லது ஏதாவதொரு அமைப்பு பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்.

மேலும் உற்பத்தியாளர்களின் உறுதிமொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்ய வேண்டும். பொருளின் சிறப்பம்சங்கள் மற்றும் தரநிலைகள் பராமரிக்கப்படும் விவரங்கள் குறித்தான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உற்பத்திப் பொருள் குறித்து ஏதேனும் ஆய்வுகள் நடத்தப்பட்டிருந்தால் அதற்கான ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும் பல பொருட்களுக்குப் புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கவேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் பல மாநிலங்களில் உள்ள தனித்துவமான பொருட்களுக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டு அதன் உற்பத்தித் திறன் மற்றும் தரத்தை உயர்த்தவும் அரசு முயற்சி எடுத்து வருகிறது.

## புவிசார் குறியீடு பெறப்பட்ட சில பொருட்களின் விவரம்.

மதுரை மல்லி, காஞ்சிப் பட்டு, பவானி ஜமக்காளம், நீலகிரித் தேயிலை, தஞ்சை ஓவியங்கள், திண்டுக்கல் பூட்டு, ஈரோடு மஞ்சள், கொடைக்கானல் மலைப்பூண்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா, காரைக்குடி கண்டாங்கிச் சேலை, பழனி பஞ்சாமிர்தம், கோவில்பட்டி கடலை மிட்டாய், சிவகாசி பட்டாசு மற்றும் நாட்காட்டி உட்பட தமிழ்நாட்டில் உள்ள பல பொருட்களுக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

இயற்கை மூலம் கிடைக்கும் பொருட்கள், விவசாயம் மூலம் கிடைக்கும் பொருட்கள் மற்றும் உற்பத்திச் செய்யக்கூடிய பொருட்கள் என அனைத்து விதமான பொருள்களுக்கும், உணவு வகைகளுக்கும் புவிசார் குறியீடு வழங்குவதன் மூலம் உலக அளவில் அப்பொருளைத் தயாரிக்கும் தொழிலாளர்களைப் பெருமைப்படுத்த முடியும். மேலும் அதன் விற்பனையை அதிகரிக்கவும் உதவ முடியும்.

# கரும்பலகை அன்றும் இன்றும்

தற்போது அனைத்தும் டிஜிட்டல் மயமாகி வருகின்றன. மக்கள் அனைவரும் நவீன அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். நாம் அன்றாடம் பயன்படுத்தும் வேலைகளிலும் பல நவீனத் தொழில்நுட்பங்கள் வந்துவிட்டன.

இந்தப் புதிய நுட்பங்கள் பல விதத்தில் வேலைப் பளுவைக் குறைத்தாலும் பாரம்பரியமாக முன் காலத்தில் இருந்தே உபயோகப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பொருட்களின் தேவை தற்போதும் இருந்து வருகிறது.

அந்த வரிசையில் கல்வித் துறையில் நெடுங்காலம் தொட்டே பயன்படுத்தப்பட்டு வரும் கரும்பலகை (Black Board) பெரும் பங்காற்றி வருகிறது. இத்தகைய கரும்பலகைதான் அனைத்து மாணவர்களின் வாழ்க்கையிலும் வண்ணங்களைக் கொண்டுவரும் பணியைச் செய்து வருகிறது.

உலகில் கல்வி தோன்றியபோதே அதற்கு உறுதுணையாக இருந்த பொருள்தான் கரும்பலகை. இத்தகைய கரும்பலகை முதன்முதலில் மணல் மூலம் உருவாக்கப்பட்டது. தொடர்ந்து படிப்படியாக மரப்பலகை வரை உருமாற்றம் அடைந்து, தற்போது டிஜிட்டல் திரையிலான பலகைகள் வரை முன்னேற்றம் கண்டுள்ளது.

## கரும்பலகையின் வரலாற்றுப் பின்னணி

பாபிலோனியா மற்றும் சுமேரியா ஆகிய நாடுகளில் முதன்முறையாகக் களிமண்ணால் ஆன பலகையில் எழுதி மாணவர்கள் கல்வி கற்றனர். பண்டைய காலங்களில் பயன்படுத்தப்பட்ட களிமண் பலகைகள் தரவுகளை எழுதிப் பாதுகாக்கப் பயன்பட்டன. மேலும் இதில் எழுதும்போது வரும் பிழையைத் தண்ணீரில் எளிதில் அழிக்கும் வகையில் அவை வடிவமைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக களிமண் பலகைகள் 11ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலும் பயன்படுத்தப்பட்டன.

## மரத்தாலான பலகைகள்

ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவில் 18ஆம் நூற்றாண்டு முதல் மரத்தாலான பலகைகள் பயன்படுத்தப்பட்டன. ஏனெனில் மாணவர்களால் காகிதம் மற்றும் மை வாங்குவதற்கான பொருளாதார வசதி இல்லை. இதன் காரணமாக மரத்தாலான சிலேட்டுகளைப் பயன்படுத்த மாணவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

உலகம் முழுவதும் பல நாடுகளில் மாணவர்கள் கல்வி கற்பதற்கு வசதியாக மரத்தாலான சிலேட்டுகளைப் பயன்படுத்தினர். சிலேட்டின் பரிணாம வளர்ச்சிதான் கரும்பலகை ஆகும். இரண்டுக்கும் இடையே அதன் பரப்பளவு மட்டுமே மாறுபடும். கரும்பலகை

கிடைமட்டமாகவும், சிலேட்டு செங்குத்தாகவும் பயன்படுத்தப்பட்டன.

### கரும்பலகையின் முன்னோடி

கரும்பலகையின் வரலாற்றில் முதன்முறையாக மாற்றத்தைக் கொண்டுவந்தவர் ஸ்காட்லாந்தின் எடின்பர்க்கில் உள்ள பழைய உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகவும் புவியியல் ஆசிரியராகவும் இருந்த ஜேம்ஸ் பில்லன்.

அவர் மாணவர்களுக்குப் பாடம் நடத்துவதற்காக சிலேட்டை சுவரில் தொங்கவிட்டு கற்றுக் கொடுக்கும் பாடங்களை எழுதினார். அதனைப் பார்த்து மாணவர்களையும் பின் தொடர்ந்து எழுதக் கூறினார். இதனையடுத்து 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் உலகின் பிற பகுதிகளில் கிட்டத்தட்ட ஒவ்வொரு பள்ளியிலும் கரும்பலகை பயன்படுத்தப்பட்டது.

### பல்வேறு விதமான பலகைகள்

கரும்பலகையின் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து, பச்சைப் பலகைகள் தோற்றுவிக்கப்பட்டன. 1960ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பச்சைப் பலகை அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் கரும்பலகைகள் அளவிற்குப் பச்சைப் பலகைகள் அனைத்துத் தரப்பினராலும் ஈர்க்கப்படவில்லை.

வகுப்பறைகளில் பின்பக்கம் அமர்ந்திருக்கும் குழந்தைகள் கரும்பலகையில் எழுதப்பட்ட தகவல்களைப் படிக்க முடியாமல் சிரமப்படுகின்றனர். இந்நிலையில் பல நிபுணர்கள் பச்சை நிறப் பலகைகளே பார்வைக்குச் சிறந்தவை எனத் தெரிவித்தனர்.

1990ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவில் உள்ள பல பள்ளிகளில் வெள்ளை நிறப் பலகைகள்தான் பயன்படுத்தப்பட்டன. தற்போது அலுவலகங்கள், கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் வெள்ளை நிறப் பலகைகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

எழுதக்கூடிய வெள்ளை நிறப் பலகைகள் தற்போது ஸ்மார்ட் வகுப்பறையில் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் போர்டுகளாக மாற்றப்பட்டுள்ளன. வண்ணமயமான காட்சிகளை முன்வைத்து மாணவர்களின் கவனத்தை ஈர்க்க ஆசிரியர்கள் நன்கு வடிவமைக்கப்பட்ட மென்பொருளைப் பயன்படுத்துகின்றனர்.



# சூழலியலை மாணவர்களுக்குக் கற்பிக்க



# ஆலோசனைகள்

உலகம் முழுவதும் இயந்திரமயமாகி வரும் இன்றைய நவீனத் தொழில்நுட்பச் சூழ்நிலையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வும் பெருகி வருகிறது. இயற்கையிலிருந்து உருவான ஒவ்வொருவருக்கும் அதனைப் பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது. இந்தப் பொறுப்புணர்வை எதிர்காலச் சந்ததியினருக்கும் கற்றுத்தர வேண்டிய அவசியமும் தேவையும் உள்ளது. அந்த வகையில் மாணவர்களுக்குச் சூழலியல் குறித்த அறிமுகத்தைத் தொடங்கவும் அதன் மீதான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தேவையான எட்டு ஆலோசனைகளை முன்வைக்கிறது இக்கட்டுரை.

**1. வகுப்பறைக்கு வெளியே :** வாரத்தில் ஒரு நாள் வகுப்பறைக்கு வெளியே பள்ளி வளாகத்திலேயே ஒரு மர நிழலில் அமர வைத்து, சூழலியல் குறித்த வகுப்பெடுக்கலாம். இயற்கை சார்ந்த அறிவியலை மாணவர்களுக்குச் சொல்லித்தர முதலில் பறவைகளைப் பற்றிக் கூறலாம். வெளியே இருக்கும் பறவைகளுக்கான பெயர்களை அவர்களிடம் கேட்க வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களது வட்டார மொழியில் பெயர்கள் வழங்கப்பட்டிருக்கும். ஒரு பறவைக்கான பொதுப் பெயர் மற்றும் உயிரினப் பெயர் ஆகியவற்றை எடுத்துக் கூறி பறவையியலில் இருந்து கற்பித்தலைத் தொடங்கலாம்.

## 2. சிறு புல்லில் உள்ள நுட்பம்

அருகம்புல், குப்பைமேனி எனப் பள்ளி வளாகத்திலேயே முளைத்து நிற்கும் பல சிறு புல், செடிகளின் பெயர்கள் கூட தெரியாமல் பல மாணவர்கள் உள்ளனர். அவர்களுக்கு இத் தாவரங்கள் பற்றியும் அதன் குணநலன்கள் பற்றியும் அறியத் தரும்போது சூழலியல் குறித்த வியப்பு மேலோங்கும். நாள்தோறும் அவர்கள் பார்க்கக்கூடிய செடி, கொடி மற்றும் மரம் குறித்துக் கற்றுத் தரும்போது இதன் வழியாக இயற்கையின் அருகில் அவர்களை அழைத்துவர முடியும்.

### 3. பூச்சிகளின் குணாதிசயங்கள்

பள்ளி வளாகத்துக்கு அருகே இருக்கும் பூங்காவிற்கு அழைத்துச் சென்று நேரில் பார்ப்பனவற்றைப் பற்றி அறிமுகப்படுத்தலாம். பூச்சிகள் சிலவற்றை அறிமுகப்படுத்தலாம். தும்பிகள், பட்டாம்பூச்சிகள் குறித்து எடுத்துக் கூறலாம். சின்னஞ்சிறு தேனீயின் அழிவு ஏற்படுத்தும் பாதிப்பு பற்றியும் பூச்சிகளின் சிற்றியக்கம் வழியாகத்தான் உலகத்தின் இயக்கம் நிகழ்கிறது என்பதைப் பற்றியும் கற்றுக் கொடுக்கலாம்.

### 4. இயற்கையின் படைப்பு

இயற்கையின் படைப்பில் அனைத்து உயிரினங்களும் சமம். எனவே ஒரு படைப்பை உயர்த்தியும், மற்றொன்றை தாழ்த்தியும் கூறுவது தவறானதாகும். இயற்கை ஒவ்வொரு உயிரினத்தையும் அதன் இயல்பில் படைத்துள்ளது. அதன் உண்மையான இயல்பை ஏற்றுக்கொள்ள மாணவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும். பள்ளிக்கு அருகில் உள்ள நீர் நிலைகளுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று, அதனுள் இருக்கும் உயிர்த் தொகுதிகளை விளக்கலாம். விதைகள் சேகரிக்கவும், அதனைப் பள்ளி வளாகத்தில் வளர்ப்பதற்கும் பழக்கலாம்.

## கோவை சதாசிவம்



தமிழ்ச் சூழலியல் எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்தவர் கோவை சதாசிவம். பூச்சிகளின் தேசம், உயிர் இனிது உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் காட்டையும் அங்கு வாழும் உயிரினங்களையும் அறிமுகப்படுத்தும் சூழலியல் வழிகாட்டியாகவும் செயல்பட்டு வருகிறார்.

### 5. சிறு உயிரும் முக்கியம்

பூச்சிகள் முதல் சிறிய உயிரினங்கள் வரை அனைத்து உயிரினங்களுக்குமான உலகம் இது என்பதை மாணவர்கள் தெரிந்து கொள்ள உதவ வேண்டும். பூச்சிகள் போன்ற சிறிய உயிரினங்களைத் துன்புறுத்தும் பழக்கம் பல குழந்தைகளுக்கு இருக்கிறது. அதனைத் தவறு என அவர்களுக்கு உணர்த்துவது ஆசிரியர்களின் கடமை. சூழலியல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வுக்கு இது அடிப்படையாக இருக்கும்.

**6. மாசுபாடு :** குழந்தைகளுக்குத் தற்போது நிகழ்ந்துவரும் உலக வெப்பமயமாதல், காற்று மற்றும் ஒளி / ஒலி மாசுபாடு, கடல் நீர் மட்டம் உயர்வு, காலநிலை மாற்றம் என அனைத்துச் சுற்றுச்சூழல் பிரச்சினைகளையும் கூறினால் புரிந்துகொள்ளக் கடினமாக இருக்கும். எனவே சுற்றுச்சூழல் மாசுபாடு குறித்து சிறு கதைகளாகக் கூறி எளிய முறையில் விளக்க வேண்டும்.

**7. மண் சார்ந்த அறிமுகம் :** ஒவ்வொரு ஆசிரியரும் அவர்கள் பள்ளி அமைந்துள்ள நிலம் சார்ந்த சூழலியல் தகவல்களை மாணவர்களுக்குச் சொல்லித் தரலாம். நெய்தல் நிலத்தில் இருப்பவர்களுக்குக் கடலில் உள்ள சூழலியல் குறித்தும், அதன் பாதிப்புகள் குறித்தும் விளக்கலாம். மருத நிலங்கள் அமைந்துள்ள டெல்டா மாவட்டப் பள்ளிக் குழந்தைகளுக்கு வயல்வெளிகள் குறித்தும், விளைச்சலுக்கு உதவும் பூச்சிகள் குறித்தும் வகுப்பு எடுக்கலாம். பூச்சிக்கொல்லிகள் குறித்தும், தீங்கில்லா உணவின் அவசியம் குறித்தும் தெளிவுபடுத்த வேண்டும். இப்படி அவரவர் பகுதிக்கு ஏற்ப சொல்லிக்கொடுக்கலாம்.

**8. தொடக்கூடாது :** பொதுவாக எந்த விலங்கினங்களையும் அவசியத் தேவை இன்றித் தொடுதல் கூடாது. பலரும் வளர்ப்புப் பிராணிகள் என்ற பழக்கத்தில் விலங்குகளைத் தொடுவது, அணைப்பது போன்ற செயல்களைச் செய்கின்றனர். இப்படிச் செய்வதால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றியும் விளக்க வேண்டும். விலங்குகளின் சில பாக்டீரியாக்கள் மனிதர்களுக்குப் பாதிப்பு தரும் என்பதையும், மனிதர்களின் சில பாக்டீரியாக்கள் விலங்குகளுக்குப் பாதிப்பு தரும் என்பதையும் கற்றுத் தர வேண்டும். சிறிய வயதில் நம்மில் பலரும் செய்த ஓணானை அடித்த கதை, பொன்வண்டு பிடித்த கதை, தும்பி வாலில் நூல் கட்டிய கதை போன்றவற்றை மாணவர்களின் மத்தியில் பகிராமல் இருத்தல் வேண்டும்.

# சிறுநீரகத்தைப் பாதுகாக்கத் தண்ணீர் குடிங்க!

மனித உடல் சீராக இயங்குவதற்கு அனைத்து உறுப்புகளும் சரியான முறையில் செயல்பட வேண்டும் என்பது முக்கியமான ஒன்று. நம் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் சீராக இயங்க, முக்கிய ஆதாரமாக விளங்கும், கழிவுகளை வெளியேற்றும் உறுப்புகளின் பணி தொடர்ந்து நடைபெற வேண்டும். குறிப்பாக, நமது சிறுநீரகம் எல்லா கால நிலைகளிலும் சரியான முறையில் இயங்க வேண்டும்.

சிறுநீரகப் பாதுகாப்பு குறித்து சென்னை மருத்துவக் கல்லூரி, சிறுநீரகவியல் துறை, உதவிப் பேராசிரியர்,

**டாக்டர் ஆர். சக்திராஜன்**

தொடர்கிறார்.





## சிறுநீரகக் கல்

ஒருவர் தன் உடலுக்குத் தேவையான அளவு தண்ணீர் குடிக்காதபோது, மஞ்சள் நிறத்தில் சிறுநீர் வெளியாவதைப் பார்க்கலாம். நீரைக் குறைவாகக் குடிப்பதால் சிறுநீரில் உள்ள கால்சியம், பாக்சைட், ஆக்சலைட் ஆகியவை சிறுநீரகத்தில் படிந்து சிறிய கற்களாக மாறும். அதுவே நாளடைவில் சிறுநீரகக் கற்களாக மாறுகின்றன. தற்போது பலருக்கும் சிறுநீரகக் கல் தொல்லை உள்ளது. இந்த நோயானது பெரும்பாலும் மரபணு வழியாக வரக்கூடிய வாய்ப்பும் உள்ளது. கூடவே மாறுபட்ட உணவுப் பழக்க வழக்கங்களினாலும் சிறுநீரகத்தில் கல் உருவாகலாம். பலருக்கும் தேவையான அளவு தண்ணீர் குடிக்காத காரணத்தினாலும் கூட சிறுநீரகத்தில் கல் ஏற்படும்.

## சிறுநீரகக் கல் சிகிச்சை முறைகள்

பெண்கள், ஆண்கள் அனைவருக்கும் சிறுநீரகக் கல் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. (15 வயதுக்குள் இருக்கக்கூடிய குழந்தைகளுக்குச் சிறுநீரகக் கல் வரும் வாய்ப்பு குறைவு.) சிறுநீரகத்தில் இருக்கும் கற்கள் 5 மி. மீட்டருக்கும் குறைவான அளவில் இருக்கும்பட்சத்தில் அதுவாகவே சிறுநீருடன் வெளியேறிவிடும். இவ்வாறு கல் வெளியேறும்போது சிறுநீரகத்தில் இருந்து சிறுநீர்க் குழாயில் (Ureter) அதிகமான வலி ஏற்படக் கூடும். இந்தக் கல்லின் அளவு 6 மி.மீட்டராக இருக்கும்போது சிறுநீரகத்திலேயே கல் தங்கி அங்கு தொற்று ஏற்படுத்தவோ, கல்லானது சிறுநீர்க் குழாய் வழியிலேயே நின்று அதிகப்படியான வலி ஏற்படுத்தவும் வாய்ப்புகள் உள்ளன. இது போன்ற சூழ்நிலையில் சிறுநீரக மருத்துவர் ஆலோசனை பெற்று அறுவை சிகிச்சை செய்து, கல்லை அகற்றி விடலாம்.

## கோடை காலத்தில் குழந்தைகள்

இயல்பாகவே நமது குழந்தைகள் அவர்களது உடலுக்குத் தேவையான தண்ணீரைச் சரியாகக் குடிப்பதில்லை. அதிலும் தற்போது நிலவும் கோடை விடுமுறை காலங்களில் குழந்தைகளின் உடல் வெப்பநிலை அதிகமாக இருக்கவும் வாய்ப்புள்ளது. குழந்தைகளுக்கு ஏற்படும் சிறுநீரகப் பிரச்சினைகளைச் சரிப்படுத்துவதற்குக் குழந்தைகளைத் தண்ணீர் குடிக்க ஊக்கப்படுத்துவது மட்டுமே ஒரே தீர்வாகும். மேலும் பள்ளி வகுப்பறையிலேயே மாணவர்கள் தண்ணீர் அடிக்கடி குடிப்பதை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

5 முதல் 10 வயதுக்குள் இருக்கும் குழந்தைகளுக்கு மலச்சிக்கல் ஏற்படுகிறதா என்பதைப் பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். ஏனெனில் மலச்சிக்கல், சிறுநீரகத் தொற்று இரண்டும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையது.

குழந்தைகளை நான்கு மணி நேரத்திற்கு ஒரு முறை சிறுநீர் கழிக்க, பழக்கப்படுத்த வேண்டும். ஏனெனில் குழந்தைகள் சரியாகச் சிறுநீர் கழிக்காதபட்சத்தில், சிறுநீர்ப் பையில் சிறுநீர் தேங்கிவிடும். இது சிறுநீர் தொற்று ஏற்பட வழிவகுக்கும் அபாயம் உள்ளது. பெரும்பாலும் 5 முதல் 10 வயதுடைய குழந்தைகளுக்குச் சிறுநீரகத் தொற்று ஏற்படும் வாய்ப்பு குறைவு என்பதால், தொற்று ஏற்பட்டவுடன் உடனடியாகச் சிறுநீரக மருத்துவரிடம் அழைத்துச் செல்வது கட்டாயம்.

அளவுக்கு அதிகமாக அடிக்கடி சிறுநீர் கழிக்கும் குழந்தைகளிடம் கடினமாக நடந்துகொள்ளாமல் அக்குழந்தையை உரிய நேரத்தில் மருத்துவரிடம் அழைத்துச் செல்வதே சிறந்தது. மேலும் சில குழந்தைகளுக்குச் சிறுநீரைக் கட்டுப்படுத்தும் திறன் சற்று குறைவாக இருக்கவும் வாய்ப்பு இருப்பதால் அக்குழந்தைகளின் பிரச்சினையை அறிந்து செயல்பட வேண்டும்.





பெண் நாள் ஒன்றிற்கு **2.7 லிட்டரும்,** ஆண் **3.7 லிட்டரும்** தண்ணீர் குடிக்க வேண்டும்.

– உலக சுகாதார நிறுவனம்

### சிறுநீரகப் பிரச்சினை குறித்த வதந்திகள்



செய்தி: சிறுநீரகக் கல்லுக்கு வாழைத்தண்டு சாப்பிட்டால் குணமாகும்.

உண்மை: இதுவரை எந்த ஆய்விலும் வாழைத்தண்டு சிறுநீரகக் கல்லை குணப்படுத்தும் என உறுதிப்படுத்தப்படவில்லை.

## பெண்களுக்கு உண்டாகும் பாதிப்பு

பெண்களுக்கு அவர்களது பதின்பருவ காலத்தில் சிறுநீரகத் தொற்று ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. ஏனெனில் மாதவிடாய் காலங்களில் அவர்களது சிறுநீரகங்கள் முழுவதும் சுத்தம் செய்யப்படாமல் இருப்பதே இதற்குக் காரணமாக அமைகிறது. மேலும் திருமணமாகி ஒரு பெண் பேறு அடைந்த பின் அப்பெண்ணின்

## சிறுநீரகப் பிரச்சினை குறித்த வதந்திகள்



**செய்தி:** டையாலிஸிஸ் சிகிச்சை எடுக்கத் தொடங்கிவிட்டால் அதனை நிறுத்தவே முடியாது.

**உண்மை:** ஒரு நோயாளியின் உடல்நிலை மற்றும் நோயின் தீவிரத்தைப் பொறுத்து குறுகிய காலத்துக்கு மட்டும் டையாலிஸிஸ் சிகிச்சை எடுப்பவர்களும் உள்ளனர்.

**செய்தி:** ஒருவருக்கு சிறுநீரகம் தேவைப்படும்போது அதனை வெளியில் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம்.

**உண்மை:** இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி மனித உடல் உறுப்புகளை விற்பது தண்டனைக்குரிய குற்றமாகும். மேலும் சிறுநீரகம் தேவைப்படுபவரின் உடலுக்குப் பொருந்தக்கூடிய சிறுநீரகத்தை வைப்பதன் மூலமே அவரைக் காப்பாற்ற முடியும்.

**செய்தி:** சிறுநீரகக் கல் இருப்பவர்கள் தக்காளி சாப்பிடக் கூடாது.

**உண்மை:** தக்காளி எந்தவிதத்திலும் சிறுநீரகக் கல்லுக்குக் காரணமாகாது.


**செய்தி:** சிறுநீரகப் பிரச்சினை இருப்பவர்கள் தண்ணீர் குடித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

**உண்மை:** அனைவரது குறிப்பிட்ட அளவு மட்டுமே தண்ணீர் குடிக்க வேண்டும். அளவுக்கு அதிகமாகத் தண்ணீர் குடிப்பதும் சிறுநீரகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.



சிறுநீர்ப் பையின் தசைகள் தளர்வடைந்துவிடும். இதன் காரணமாகவும் சில பெண்களுக்குச் சிறுநீரைக் கட்டுப்படுத்தும் திறன் குறைந்துவிடும்.

தும்மல், இருமல் மற்றும் கடினமான வேலை செய்தல் போன்றவற்றால் பெண்களின் சிறுநீர்ப் பையின் தசைகளுக்கு அழுத்தம் வருவதால், சிறுநீர் கட்டுப்பாடு இல்லாமல் தானாகவே கசியும் நிலை உண்டாகும். இவற்றைச் சரிசெய்ய பெண்கள் மகப்பேறு மருத்துவரை அணுகலாம். அங்கு அவர்கள் சில உடற்பயிற்சிகளைப் பரிந்துரைப்பார்கள். இதனை கெகல் உடற்பயிற்சி (Kegal Exercise) என்பர்.



## சிறுநீரகவியல் புற்றுநோய்



உலகின் அதிக பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய நோய்களில் புற்றுநோய் முக்கியமான ஒன்றாகும். சிறுநீரகப் புற்றுநோய் பெரும்பாலும் அதிகமாகப் புகைப்பிடிக்கும் பழக்கம் உடையவர்களிடமும், 40 வயதுக்கு மேற்பட்டவர்களிடமும் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில வேதிப்பொருள் சம்பந்தமான தொழிற்சாலையில் வேலை செய்பவர்களுக்கும் சிறுநீரகப் புற்றுநோய் வருவதாகவும் தெரியவந்துள்ளது. எனவே இது போன்ற தொழிற் சாலைகளில் பணிபுரிபவர்கள் அடிக்கடி சிறுநீரகப் பரிசோதனை செய்து கொள்வது முக்கியம். ஏனெனில் இந்தப் பரிசோதனை செய்வதால் முன்னதாகவே நோயைக் கண்டறிந்து சிகிச்சையைத் தொடங்க முடியும்.



### சிறுநீரகவியல் புற்றுநோயின் அறிகுறிகள்

1. வலி மற்றும் எரிச்சல் ஏதும் இல்லாமல் சிறுநீரில் இரத்தம் வெளியேறுதல்.
2. முதுகின் இரு புறங்களில் அல்லது அடிவயிற்றில் கடுமையான வலி.
3. அடி வயிற்றில் கட்டி மற்றும் காய்ச்சல், பசியின்மை ஆகியவை.

- இத்தகைய அறிகுறிகள் இருக்கும் நபர்கள் உடனடியாக முழு உடல் மருத்துவப் பரிசோதனை செய்தல் நலம்.





# முன்மாதிரியான என் வகுப்பறை

என் பள்ளியில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் படிக்கின்றனர். தற்போது வடமாநிலக் குழந்தைகளே அநேகம். அப்பள்ளியில் நான் ஆசிரியராகப் பணியாற்றுகிறேன்.

மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க பள்ளி முழுவதும் கண்கவர் வண்ணம் பூசப்பட்டது. நகராட்சிக்குக் கடிதம் கொடுத்து ஒரு வகுப்பறைக்கு Smart Class பெற்றேன். தரையில் டைல்ஸ், மின்விசிறி, பிரிண்டர், எல்.இ.டி. லைட்ஸ் என்று வகுப்பறையை வண்ணமயமாக மாற்றினேன்.

மாணவர்களின் உடையில் பேட்ஜ், பெல்ட் போன்ற மாற்றங்கள் செய்தேன். மாணவர்களுக்கு கையேடு (Diary) என்று அச்சிட்டுக் கொடுத்து தினசரி வீட்டுப் பாடங்களை அதில் குறித்து, பெற்றோரிடம் கையொப்பம் பெற்றேன். 'புளூமிங் ஸ்டார்ஸ்' (Blooming Stars) என்று ஒரு பலகை வைத்து மாணவர்களின் புகைப்படங்களை அதில் ஒட்டிவைத்து, தூய்மையாக வரும் மாணவர்கள் மற்றும் சிறப்பாகச் செயல்படும் மாணவர்களின் பெயரில் அட்டையை அதில் ஒட்டினேன்.

மாதந்தோறும் நடக்கும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் அதிக அட்டைகள் பெறும் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினேன்.

என் வகுப்பறை 'எண்ணும் எழுத்தும்' வகுப்பறை என்பதால் வகுப்பறையைக் குழந்தைகளைக் கவரும் வகையில் அமைத்தேன். மாணவர்களுக்குத் தொடுதிரை பலகை மூலம் பாடம் கற்பித்தேன். மேலும் பாடல்களை நான் பாடி அதை ஸ்மார்ட் போர்டு மூலம் மாணவர்களுக்குப் போட்டுக் காட்டி அவர்களைப் பாட வைத்துப் பின் மாணவர்களை காணொலி வாயிலாகப் பதிவு செய்து போட்டுக் காட்டினேன். அதை ஒரு கோப்பில் (File) சேமித்து வைத்துள்ளேன்.

இன்று என் வகுப்பறை ஒரு முன்மாதிரியாக மட்டும் அல்லாமல் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் அமைப்பதற்கு என் தலைமை ஆசிரியர் பெரிதும் உறுதுணையாக இருந்தார்.

**அ. அருணா**, இடைநிலை ஆசிரியர்,
ஊ.ஒ.து.ப., ஸ்டேன்மோர், வால்பாறை, கோயம்புத்தூர்.

## உங்களிடமிருந்து...




ஜூன் மாத கனவு ஆசிரியர் இதழை முழுவதுமாகப் படித்தேன். அட்டைப் படம் மிக அருமை. பக்கத்துக்குப் பக்கம் பளிச்சென எழுத்துகளும் படங்களும் கண்களைக் கவர்கின்றன. மாணவர் மன்றம், வானவில் மன்றம், மெய்யறிவுக் கொண்டாட்டம், சிறார் இலக்கியத் திருவிழா கட்டுரைகளும் படங்களும் மாணவ, மாணவிகளின் அறிவுத்திறனை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் பாராட்டும்படி இருந்தன. ஆசிரியர் தாமோதரனின் வகுப்பறைச் செயல்பாடுகள், மாணவர்களிடம் நூலறிவை வளர்க்கும் விதம் பாராட்டும்படி உள்ளது.

– **க. குழந்தைவேல்**, ஓவிய ஆசிரியர்,
அ.மே.நி. பள்ளி, கிருஷ்ணராயபுரம், கரூர்

ஆசிரியர்களுக்கான களமாய், பள்ளிக் குழந்தைகளின் இடைநிற்றல் காரணங்கள் கண்முன் காட்சியாய் சௌந்தரவல்லியின் மீசை சிறுகதை அரும்பியிருந்தது. அற்புதம்.

– **ச.பா.உமாமகேஸ்வரி**, பட்டதாரி ஆசிரியர், அ.மே.நி.பள்ளி – வளர்புரம்,
அரக்கோணம் ஒன்றியம், இராணிப்பேட்டை

எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய 'நினைவில் நிற்கும் பள்ளி நினைவுகள்' நினைவோடை பகுதி அருமை. எஸ். ராமகிருஷ்ணனின் 'சௌந்தரவள்ளியின் மீசை' சிறுகதை இதயத்தை ஈர்த்தது.

– **மலைச்சாமி**, பட்டதாரி ஆசிரியர், ஈரோடு.

'எல்லோருக்கமான கல்வி' தொடரில் கடந்த மாதம் ஆட்டிசநிலைக் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் முறையைப் பற்றி விரிவாக விளக்கிக் கூறி வருவது எங்களைப் போன்ற ஆசிரியர்களுக்கு வரப்பிரசாதம்.

– **கே. சுப்பிரமணியன்**, சென்னை.

# சம்மதங்கள் எங்கிருந்து பிறக்கின்றன?

- பாவண்ணன்



ஆங்கில எழுத்துகளின் வரிசையின்படிதான் எங்கள் நாலாவது வகுப்பு அட்டன்டன்ஸ் புத்தகத்தில் பெயரெழுதி இருந்தார்கள். அடர்த்தியான பச்சை வர்ணத்தில் பைண்டிங் செய்த அந்த அட்டன்டன்ஸ் புத்தகத்தைப் பார்ப்பதற்கே மிரட்சியாய் இருக்கும். வீட்டில் இருந்து பள்ளிக்கூடம் செல்கிற வழியில்கூட இந்த விஷயம் ஞாபகத்துக்கு வந்த கையோடு பயமும் சேர்ந்துவிடும். ஏற்கெனவே அம்மாவும் ஆயாவும் சொன்ன கதைகளில் இருந்து எமனுக்கு அந்தரங்கக் காரியதரிசியான சித்ரகுப்தன் பற்றியும் அவன் சகல நேரங்களிலும் சுமந்த ஜனன மரணப் பதிவேடு பற்றியும் ஒரு உருவம் எனக்குள் திரண்டு உருவாகி இருந்தது.

ஓவியம் : எஸ். பாலகிருஷ்ணன்



அந்த உருவத்தையும் அட்டன்டன்ஸ் புத்தகத்தையும் சம்பந்தப்படுத்திப் பார்த்துப் பார்த்து மனசுக்குள் ஒரு கலக்கத்தை உருவாக்கிக்கொண்டேன்.

ஒன்பது மணிக்குப் பள்ளிக்கூடம். இறைவணக்கம் முடிந்ததும் வரிசை வரிசையாய் வகுப்பறைக்குச் செல்வோம். கடைசிப் பையன் உள்ளே நுழைகிறபோதே ராமதாஸ் சார் வந்து விடுவார். ராமதாஸ் சார் என்றாலே சிம்மசொப்பனம். பிள்ளைகள் எல்லாம் அவரவர்கள் இடத்தில் நின்றுகொண்டே 'வணக்கம் ஐயா' சொல்லுவோம்.

"ம்ம்" என்று சொல்லிக்கொண்டே அவர் மேசைக்குப் பக்கத்தில் போய் நின்று 'உட்கார்' என்கிற மாதிரி சைகை செய்வார். அந்தக் குரலும் செய்கையும் அசலான சிங்கத்தையே நினைவுபடுத்தும் எனக்கு. மேலும் மேலும் மனசு கலக்கத்தில் உழலும்.

பியூன் முனுசாமிதான் அட்டன்டன்ஸ் புத்தகங்களைச் சுமந்து வருவார். அவரது தோளில் ஏழெட்டுப் புத்தகங்கள் இருக்கும். அவர் தோள்பட்டையிலிருந்து தலையின் உயரத்துக்குச் சரியாக இருக்கும். இந்த வகுப்புக்கு எந்தப் புத்தகம் என்றெல்லாம் அவருக்குத் தெரியாது. சார் முன்னால் நின்று ஒவ்வொன்றாய்த் தோளில் இருந்து எடுத்து நீட்டி "இதா?" என்பார்.

சார், "ம்ஹூம்" என்பார். மறுபடியும் இன்னொரு புத்தகத்தைத் தோளில் இருந்து இறக்கி "இதா?" என்பார். அந்தப் புத்தகமாகவும் இருக்காது. சார் தலையசைப்பார். இத்தனை நாழிக்குள்ளேயே அவருக்கு ஆத்திரம் ஏறிவிட்டிருக்கும்.

"முண்டம் முண்டம்... கொஞ்சமாச்சும் மூள இருக்கா? படிக்கத்தான் தெரியல. ஒண்ணு ரெண்டாவது தெரிஞ்சிக்கறதுக்கு இன்னா கேடு? மாசம் பொறந்தா சம்பளம் வாங்கற இல்ல? நாலாங்கிளாஸுக்கு ஏழாவது எட்டாவது அட்டன்டன்ஸ் நீட்டறியே..." என்று சத்தம் போடுவார்.

அவர் திட்டும் சத்தத்தைக் கேட்கிறபோது எங்களுக்கு அப்படியே வயிற்றில் புளியைக் கரைக்கிற மாதிரி இருக்கும். உடம்புக்குள் சகல உறுப்புகளும் நடுங்குகிற மாதிரி இருக்கும். குரலின் அதிர்ச்சியில் என்றைக்காவது ஒரு நாள் இந்தக் கூரையும் விழுந்துவிடும் என்று தோன்றும். ஆனால் முனுசாமிக்கு அப்படியெல்லாம் தோன்றாது போலும். காதிலே எதுவும் விழாதது மாதிரி காவிக் கறையேறிய பற்களைக் காட்டிச் சிரித்தபடி இன்னொரு புத்தகத்தை நீட்டி "இதா?" என்பார்.

'ஏ' என்கிற எழுத்தில் ஆரம்பமாவது ஆனந்தன் பெயர் மட்டும்தான். அவன் 'உள்ளேன் ஐயா' சொன்ன கையோடு என் பெயர் சொல்லப்பட்டு விடும். அவர் கூப்பிட்டு நான் கை தூக்கிச் சொன்ன பிற்பாடுதான் மனசு திருப்திப்படும். கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது பயம் நீங்கி ஆசுவாசமாக உணர்கிற மாதிரி இருக்கும். அதைக்கூடக் கெடுத்துவிட்டிருந்தான் இந்தச் சின்னச்சாமி பையன்.

என் பெயருக்கு அடுத்த பெயர் அவன்தான். என்னைக் கூப்பிட்டு முடித்ததும் கையை மேலே உயர்த்தி, "உள்ளேன் ஐயா" என்று தயாராய் இருக்கவேண்டும் அவன். அப்படி ஒரு சூழலைத்தான் ராமதாஸ் சாரும் எதிர்பார்த்திருந்தார். இது நடக்காத பட்சத்தில் அவருக்குக் கண்மண் தெரியாமல் கோபம்



வந்துவிடும். மறுபடி பார்க்க நேரும்போது அறைந்து விடுவார். கால்சட்டை நனைந்து விடுகிற மாதிரி நிற்கவைத்து திட்டுவார். வராத பையனுக்குத்தான் இந்த நிலைமை என்றாலும் சின்னசாமி வராததற்கு நானும் அனுபவிக்க வேண்டி இருந்தது. துரதிர்ஷ்டம்தான்.

"பாலாஜி..."

"சார்..."

"ஏன்டா, சின்னசாமி வரல?"

"தெரில சார்..."

"ஓங்க ஊட்டுக்குப் பக்கத்து ஊடுதானடா அவன்?"

"ஆமா சார்..."

"பக்கத்தூட்டுப் பையன் ஏன் ஸ்கூலுக்கு வரலன்னு தெரியாதா...?"

"தெரில சார்..."

"ஊருக்குப் போயிருக்கானா?"

"தெரில சார்..."

"ஒடம்பு கிடம்பு சரியில்லியா...?"

"தெரில சார்..."

"த்தூ. தெரில தெரிலங்கறதுக்கு ஒனக்கு கண்ணு எதுக்கு? காது எதுக்கு? மூள எதுக்கு? அறுத்துப் போடுடா எல்லாத்தயும். கடவுள் எதுக்குடா குடுத்திருக்கான் இதெல்லாம்? எல்லாத்தையும் தெரிஞ்சிக்கணும்னுதான். களிமண்ணு மாதிரி நிக்கறதுக்கில்ல. நாளக்கி இன்னா விஷயம்னு தெரிஞ்சிக்கினு வரணும். புரிதா...?"

"சரி சார்..."

அந்த நிமிஷத்தில் இருந்து என் பயமும் ஆரம்பித்தது. சின்னசாமி வராததற்கு என்னை இப்படி ஆட்டுவிக்கிறாரே என்று கலவரப்பட்டது மனசு. ஏற்கெனவே சீக்குக்கோழி மாதிரி என் உடம்பு காற்றோ, மழையோ கொஞ்சம் அதிகமானாலும் கூட உடம்புக்கு எந்த வியாதியாவது வந்து சேரும். சின்னசாமி வராததைப் பெரிய விஷயமாக்கி மிரட்டப்பட்டதும் மீண்டும் வியாதி வரும்போல இருந்தது எனக்கு.

சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பியபோது உற்சாகமிழந்திருந்தாலும் எப்படியும் ஆறு மணி சங்கு ஊதுவதற்குள் சின்னசாமி பற்றிப் புலன் விசாரணை செய்துவிடவேண்டும் என்று பரபரத்தது எனக்கு. ஆறு மணிக்குப் பிறகு வெளியே இறங்கிப் போகமுடியாது. ராமசாமி சார் மாதிரியே அம்மா காலை ஒடித்து விடுவாள்.

புத்தகப் பையை ஆணியில் தொங்க வைத்துவிட்டு அம்மா கொடுத்த கேழ்வரகு அடையைத் தின்றுவிட்டு பாப்பாவோடு கொஞ்ச நேரம் ஆடுகிற மாதிரி ஆடி இருந்துவிட்டு மெதுவாய் வெளியேறினேன்.

சின்னசாமி வீடு சாத்தி இருந்தது. கதவை மூடிக்கொண்டு தூங்கினாலும் தூங்கக்கூடும் என்று நினைத்து பெயரைச் சொல்லிக் கூப்பிட்டபடியே கதவைத் தள்ளித் திறந்தேன். உள்ளே யாரும் இல்லை. அடுப்புக்குப் பக்கத்தில் படுத்துக் கிடந்த பூனை ஒன்று என்னைக் கண்டு மிரண்டு டக்கென்று சுவரில் ஏறி இறவாணத்தின் வழியே இறங்கி ஓடியது. பழைய பாய் ஒன்று மூலையில் கிடந்தது. முதலில் இருந்த மாதிரியே கதவை இழுத்துச் சாத்திவிட்டு வெளியே வந்து நின்றுகொண்டேன்.

சின்னசாமிக்குக் கணக்கும் ஆங்கிலமும் விஞ்ஞானமும் எப்போதும் கஷ்டமான பாடங்கள். மாதாந்திர டெஸ்ட்டுகளில் எல்லாம் நூற்றுக்கு ஏழு, எட்டு என்றுதான் எடுப்பான். இங்கிலீஸ் டிக்டேஷன் கொடுத்தால் பட், கட் என்று எப்பவாவது சுலபமான வார்த்தைகள் வரும்போது மாத்திரம் ஒன்று, இரண்டு என்று எடுப்பான். மீதி நேரங்களில் எல்லாம் சைபர்தான். இதனாலேயே ராமதாஸ் சாரிடம் எக்கச்சக்கமாகத் திட்டும் உதைகளும் வாங்குவான். 'முண்டம் முண்டம்' என்று குனியவைத்து முதுகில் பட் பட்டென்று துணி துவைக்கிற மாதிரி சரமாரியாய் அடித்து விடுவார். சில சமயங்களில் சுவரோடு ஒட்ட வைத்து நாற்காலி போடவைத்து விடுவார். இதனால்தான் சின்னசாமி ஸ்கூலைவிட்டு நின்றுவிட்டானோ என்று சந்தேகம் வந்தது.

கூடவே 'அடிச்சி அடிச்சி வெரட்டிட்டு எதுக்கு வரலன்னு என்னயே மெரட்றாரு' என்று சார் மேல் கோபமாய் வந்தது. ஆனாலும் வெளியில் இதையெல்லாம் காட்ட சாத்தியமில்லை. அதன் விளைவுகள் எல்லாம் பயங்கரமாய் இருக்கும். கிறுவி, கர்வி என்று பட்டங்கள் வரும். சார் உதைப்பது போதாதென்று அம்மாவும் அடிப்பாள். எனவே கூடியவரைக்கும் சின்னச்சாமியைச் சமாதானப்படுத்தி பள்ளிக்கூடத்துக்கு அழைக்கவேண்டும்

என்று நினைத்தேன். அடியின் வலியிலும் வேதனையிலும் மேலும் மேலும் பிகு செய்து ஒருவேளை சின்னசாமி மறுத்தாலும்கூட 'இனிமே சாயங்காலம் வெளயாடற நேரத்துல இங்க்லீஷ் கணக்குல்லாம் சொல்லிக்குடுக்கறண்டா சின்னசாமி. பத்துக்கு அஞ்சி ஆறுன்னு வாங்கற அளவுக்காவது கத்துக் குடுக்கறன்டா, கவலப்படாத' என்று தேற்றி தைரியப்படுத்தி அழைக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்.

சாணிக் கூடையைத் தூக்கிக்கொண்டு வந்த சின்னச்சாமியின் அம்மாதான் என்னை முதலில் பார்த்தாள். வாசலிலேயே நின்றிருந்த என் கோலம் அவளுக்கு ஆச்சரியம் தந்திருக்க வேண்டும்.

"யாரு...?"

"நான்தான் பாலாஜி..."

"எதுக்கு நிக்கற இங்க?"

"சின்னசாமி இல்லியா...?"

"இல்ல."

"அவனத்தான் பாக்கணும்னு நிக்கறன்."

"எதுக்கு?"

"நாலு நாளா அவன் பள்ளிக்கூடத்துக்கு வரல. அதான், சார் அவனப் பாத்து கூப்பிட்டாரச் சொன்னாரு..."

"அதல்லாம் வரமாட்டான்னு போய்ச் சொல்லு."

ரொம்பச் சாதாரணமாய் அவள் சொன்ன பதில் எனக்குப் பயத்தைத் தந்தது. இத்தனை நேரம் வரைக்கும் சின்னசாமியைச் சமாதானப்படுத்துகிற கற்பனை மறைந்து மனசுக்குள் சார் பற்றியும், இந்தப் பதில் மூலம் நேரப் போகிற சம்பவங்கள் பற்றியும் பயம் பரவி உடம்பு உதறியது எனக்கு.

"நாளக்கித்தான் வரமாட்டானா? இல்ல எப்பவும் வர மாட்டானா...?"

"எப்பவும்தான்டா... போ..."

**அப்புறம் பேச எதுவுமில்லை என்கிற மாதிரி முந்தானையை உதறி முகத்தைத் துடைத்தபடி போய்விட்டாள் அவள். கொஞ்ச தூரம் நடந்து தந்திக் கம்பந்தோறும், கோயில் வாசல்படியில், பாலத்துப் பக்கம் என்று என்னமோ தெருவை வேடிக்கை பார்க்கிற மாதிரி மாறி மாறி நின்று சின்னசாமி வரமாட்டானா என்று பதைபதைப்போடு எதிர்பார்த்தேன் நான். அவனைப் பார்த்து ஒரு வார்த்தையாவது கேட்க மனசு துடித்தது.**

"வெளக்கு வச்சப்றமும் தொரைக்கு ஆட்டம் கேக்குதா...?"

பின்பக்கமாகவே வந்த அம்மா மடேர் என்று பிரம்பால் அடித்த பிற்பாடுதான் சுயநினைவு வந்தது. வலியில் "ஐயோ, ஐயோ" என்று அழுதேன்.

### ஆசிரியர் குறிப்பு

### பாவண்ணன்



பாஸ்கரன் எனும் இயற்பெயர் கொண்ட பாவண்ணன் விழுப்புரம் மாவட்டம் வளவனூர் என்னும் சிற்றூரில் பிறந்தவர். தற்போது பெங்களூரில் வசித்துவருகிறார். சிற்றிதழ்களிலும் பெரிய இதழ்களிலும் தொடர்ந்து படைப்புகளை எழுதிவருபவர். கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக, கன்னட மொழியிலிருந்து பல முக்கியமான ஆளுமைகளைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் சிறுகதை, நாவல், கவிதை, சுயசரிதைகள் என ஏராளமான படைப்புகளை மொழிபெயர்த்தளித்துள்ளார். இவர் பெரியவர்களுக்கு மட்டுமல்லாது சிறார்களுக்கும் தொடர்ந்து எழுதி வருகிறார். சிறந்த மொழிபெயர்ப்புக்காக சாகித்ய அகாடமி விருதையும் வென்றிருக்கிறார். 2022 ஆம் ஆண்டில் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல் விருது வழங்கப்பட்டது.

"இன்னாடா ஆட்டம் ஒனக்கு?" என்று அம்மா மீண்டும் அடிக்க விசையுடன் கையை ஓங்கினாள். தப்பிக்க நகர்ந்த என் முயற்சிகள் பயனற்றுப் போயின. கொத்தாக மயிரைப் பிடித்து மறித்து அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அரை அடிகூட நகர முடியாமல் செய்துவிட்டாள் அம்மா.

"சும்மாதாம்மா..."

சின்னச்சாமியின் விஷயத்தைச் சொல்ல எனக்குப் பயமாய் இருந்தது.

"நட ஊட்டுக்கு."

வீட்டுக்குள் கொஞ்ச நேரம்கூட எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. பக்கத்து வீட்டில் சின்னசாமியின் குரல் எப்பவாவது கேட்காதா என்று கூர்மையாய் காது கொடுத்துக் கேட்டபடி இருந்தேன். ராத்திரி தூங்கப் போகிற வரைக்கும் கூட எந்தத் தடயமும் இல்லை. நேரம் ஆக ஆக என் பயமும் அதிகமாகியது. நடுநடுவில் ராமதாஸ் சாரின் முகம் ஓரிரு நிமிஷங்கள் மனசுக்குள் ஓடியது.

மறுநாள் தூங்கி எழுந்தபோது எந்த ஞாபகமும் இல்லை. படிப்பும் எழுத்துமாய் கொஞ்ச நேரம் ஓட்டிவிட்டு குளித்து உடை மாற்றி பள்ளிக்கூடப் பையை எடுக்கப் போகும்போதுதான் சுரீர் என்று சின்னசாமியின் விஷயம் ஞாபகம் வந்தது. எல்லாச் சூழல்களிலிருந்தும் சட்டென்று மனம் விலகி, பதற்றம் கூடியது.

மெதுவாய் வீட்டை விட்டிறங்கி சின்னசாமியைப் பார்க்க ஓடினேன். நல்லவேளை, நான் போன நேரத்துக்கு

சின்னசாமி திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்தான். பள்ளிக்கூடம் கிளம்புகிற நேரத்தில் துளிக்கூட அவசரமில்லாமல் அவன் தூங்கிக் கிடப்பதைப் பார்க்க ஆச்சரியமாய் இருந்தது. அருகில் நெருங்கி மேலே கிடந்த போர்வையை இழுத்தேன். கொஞ்சம் கூட அசைவில்லாமல் கிடந்தான் சின்னசாமி. ஒல்லிக்குச்சியான உடம்பு. அரிசி அளக்கிற மாகாணி மாதிரி கழுத்து சிறுத்துக் கிடந்தது. கறுத்த முகம். மந்திரித்துக் கட்டிய தாயத்து. எலும்பு தெரிகிற மார்பு. கம்பந்தட்டை மாதிரி துருத்திக் கிடந்த தோள்பட்டை எலும்பு. என்னமோ இரவு முழுக்க பாரத்தைச் சுமந்து கிடந்தவன் மாதிரி அசைவில்லாமல் கிடந்தான்.

"சின்னசாமி..."

மெதுவாய் கிசுகிசுத்தேன். ஒன்றும் பதில் இல்லாமல் போக, நாலைந்து தரம் தொடர்ந்து கிசுகிசுத்தேன். அதற்கும் பதிலற்றுப் போனதும் உடம்பைத் தொட்டு உலுக்கினேன். சின்னதாய்க் கண் விழித்த சின்னசாமியைப் பார்க்க சந்தோஷமாய் இருந்தது. இனி எழுந்து உட்கார்வான் என்று எதிர்பார்க்கும்போது அவன் மீண்டும் கண்களை மூடிக்கொண்டான். அதிர்ச்சியாய் இருந்தது எனக்கு. மீண்டும் சத்தமிட்டு உலுக்கினேன். இந்த முறை என் சத்தத்தைக் கேட்டு உள்ளிருந்து அவனுடைய அம்மா வந்துவிட்டாள்.

"யாரது தூங்கறவன எழுப்றது...?"

"நான்தா பாலாஜி..."

"எதுக்கு அவன எழுப்ற?"

"பள்ளிக்கூடத்துக்கு..."

"அவன் வரமாட்டான்னு நேத்தே சொன்னன்ல. போ... போ... அவன தூங்க உடு..."

இப்போதாவது அவன் எழுந்து விடுவான் என்று நப்பாசையாய் இருந்தது எனக்கு. ஆனாலும் அப்படி எந்த ஆச்சர்யமும் நடக்கவில்லை. அசையாமல் ஒரு கன்றுக்குட்டி மாதிரி தூங்கிக் கிடந்தான் அவன். அவனையும் அவன் அம்மாவையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டேன் நான்.

அட்டன்டன்ஸ் புத்தகத்தைக் கையால் புரட்டும் ராமதாஸ் சாருக்கு என்ன பதில் சொல்வது என்று குழப்பமாய் இருந்தது. என் வார்த்தைகளில் நம்பிக்கை அற்றுப் போகும் பட்சத்தில் அனாவசியமாய் வசவுகள் வாங்க வேண்டுமே என்று கலவரப்பட்டது மனசு.

"பாலாஜி..."

"உள்ளேன் ஐயா..."

அடுத்த பெயரைக் கூப்பிடாமலேயே என்னை நிமிர்ந்து பார்த்தார். சிங்கம் சுண்டெலியைப் பார்க்கிற மாதிரி இருந்தது.

"சின்னச்சாமிய பாத்தியாடா...?"

"ம் சார்...."

"பின்ன எதுக்கு கூப்ட்டாரல...?"

"தூங்கனான் சார். எழுப்பி எழுப்பிப் பாத்திட்டு வந்துட்டன் சார்..."

"பொய் சொல்லாதடா. பொய் சொல்ற வாய்க்கு போஜனம் கெடைக்காது..."

"சத்தியமா, தூங்கனான் சார்."

"சிச்சீ. எல்லாத்துக்கும் சத்தியம் செய்யாதடா முண்டம்."

"நெஜமா பாத்தன் சார். தூங்கனான் சார், கண்ண தெறந்துட்டு மறுபடியும் தூங்கிட்டான் சார்."

"நாளக்கி இட்டாறியா...?"

"ம் சார்."

"அவன இட்டுக்னுதா உள்ள நொழயணும் நீ. இல்ல திருப்பி அனுப்ச்சிடுவேன்..."

"சரி சார்!"

சாயங்காலம் திரும்பி வரும்போது கொஞ்சம்கூட உற்சாகம் இல்லை. களையற்றுக் கிடக்கிற முகத்தைப் பார்த்து "ஜொரம் அடிக்குதாடா?" என்று பத்து தரமாச்சும் கேட்டாள் அம்மா. கழுத்திலும் மார்பிலும் தொட்டுத் தொட்டு உடம்புச் சூட்டைச் சோதித்தாள். எதிலும் அக்கறையில்லாமல் வெளியே வந்தேன். பிள்ளைகள் எல்லாம் பம்பரம் ஆடிக்கொண்டிருந்தார்கள். மெதுவாய் நடந்து சின்னச்சாமியின் வீட்டுப் பக்கம் பார்த்தேன். வீடு சாத்தி இருந்தது. வருத்தத்தோடு கோயில் பக்கம் போய் உட்கார்ந்தேன். எந்தத் திசையிலிருந்தாவது சின்னசாமி வந்துவிடமாட்டானா என்று நினைத்தேன்.

எதேச்சையாய் திரும்பியபோது கிராமணி கடைப்பக்கமிருந்து சின்னசாமி வந்துகொண்டிருந்தான். இரண்டு கைகளாலும் அணைத்தபடி தலையில் பெரிய பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டு வந்தான். முதலில் அவன் சின்னசாமிதானா என்று சந்தேகம் வந்து கால் நிஜார் நிறத்தையும், எலும்பான உடம்பையும் வைத்துத்தான் அடையாளம் காணமுடிந்தது.

"சின்னசாமி..."

அவசரமாய் எழுந்து ஓடினேன். நொடியில் எனது கஷ்டங்கள் எல்லாம் மறைந்துவிட்ட மாதிரியும் எல்லாப் பிரச்சினைகளும் தானாகவே ஒரு முடிவுக்கு வந்த மாதிரியும் தோன்றியது. மூச்சு இரைக்க இரைக்க அவன் பக்கத்தில் போய் நின்றேன். அவனும் நின்று என்னைப் பார்த்தான். அந்தப் பெரிய பாத்திரத்தைத்



தூக்கமுடியாமல் உடம்பு தள்ளாடுகிற மாதிரி இருந்தது. சோனியான அவன் நெஞ்சக்கூடும் உள் வாங்கிய கண்களும் சங்கடப்படுத்தியது.

“இன்னாடா...?”

“காலைல எழுப்ப எழுப்ப ஏன்டா அப்பிடி தூங்கன? நா கூப்ட்டது காதுல உழலியா...?”

“ம்ஹூம்...”

“ஒங்கம்மா சொல்லலியா...?”

“ம்ஹூம்...”

“நேத்லேந்து ஒன்னத் தேடறேன் தெரிமா...?”

“சீக்கிரம் சொல்டா பாலாஜி. தல வலிக்குது. போவணும்.”

“எதுக்குடா ஸ்கூலுக்க வரமாட்டற...?”

“எதுக்கு கேக்கற...?”

“ராமதாஸ் சாருக்கு ரொம்பக் கோவம். நீ வரலன்னு ஒரே ஆத்தரம். பாத்து கையோட கூப்ட்டாரணும்னு எங்கிட்ட சொன்னாரு. இன்னிக்கு நீ தூங்கனன்னு சொன்னப்போ நம்பவே இல்ல தெரிமா...?”

சின்னசாமியின் முகம் மிகவும் துக்கம் கொள்கிற மாதிரி இருந்தது. உணர்வே இல்லாமல் சில நிமிஷங்கள் நின்றிருந்தான். கண்ணின் கோடியில் வருத்தம் தேங்கியது.

“ஸ்கூலுக்கெல்லாம் நா இனிமே வரமாட்டன்டா பாலாஜி...”

“சார் ஒன்ன இனிமே அடிக்க மாட்டார்டா வாடா.”

“அதுக்கில்லடா பாலாஜி...”

“கஷ்டமான பாடத்தயெல்லாம் நான் சொல்லிக் குடுக்கறன்டா. டெஸ்ட்ல நெறயா மார்க் வாங்கலாம்டா.”

“த்ச். அதுக்கில்லடா பாலாஜி...”

“பின்ன எதுக்குடா...?”

“சினிமா கொட்டாய்ல முறுக்கு விக்கறன்டா நானு. ஸ்கூல்லாம் இனிமே கெடையாதுன்னு அம்மா சொல்லிடுச்சி. இப்பகூட முறுக்கு மாவுதா அரச்சிம் போறன்.”

எனக்கு வருத்தமாய் இருந்தது. நம்புவது கஷ்டமாய் இருந்தது. எதனுடன் இதைச் சம்பந்தப்படுத்திக்கொள்வது என்று புரியவில்லை. அவன் பேசப் பேசக் குரலில் ஏறிய வருத்தமும், முகத்தில் படிந்த கோடுகளும், கண்களில் தெரிந்த விவரம் புரியாத அச்சமும் என்னை ஒடுங்கச் செய்தன.

“நா வரன்டா பாலாஜி, மொதலாளி திட்டுவாரு.”

மரம் மாதிரி நான் நின்றிருந்தபோதே சின்னசாமி நகர்ந்து விட்டான். பாதங்களை அழுத்தி அழுத்தி வைத்து இடுப்பை ஒடித்து சுமப்பதற்கான உறுதியை உண்டாக்கிக்கொண்டு அவன் நடந்து சென்ற விதம் மனத்தில் பதிந்தது.

மறுநாள் காலையில் எதிர்பார்த்த மாதிரி ராமதாஸ் சார் அட்டென்டன்ஸ் புத்தகத்தை வைத்துக்கொண்டு சின்னசாமியைப் பற்றிக் கேட்டார்.

“அவன் பள்ளிக்கூடம்லாம் வரமாட்டானாம் சார். வேலைக்கிப் போறான் சார்.”

“அவனப் பாத்தியா நீ?”

“அவனேதான் சார் சொன்னான்.”


“இன்னான்னு சொன்னான்?”

“சினிமா கொட்டாய்ல முறுக்கு விக்கறன். ஸ்கூலுக்குல்லாம் வரமாட்டன்னு...”

அடுத்த நொடி திடுதிடுவென்று நடந்துவந்து என் வார்த்தைகளில் நம்பிக்கையற்று உச்சந்தலையைப் பிடித்து உலுக்கி நாலு சாத்து சாத்தப் போகிறார் என்று நினைத்தபடி கலக்கத்தோடு ராமதாஸ் சாரைப் பார்த்தேன். அட்டன்டன்ஸ் புத்தகத்தை அப்படியே மேசைமேல் சரித்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார். கொஞ்சநேரம் அந்தப் புத்தகத்தையே வெறித்தபடி இருந்தார். ஒரு வார்த்தைகூட இல்லாமல் வெட்டி விழுந்த கிளை மாதிரி சாய்ந்திருந்தார்.

அன்றைய தினத்துக்கு அட்டன்டன்ஸை எடுக்கவே இல்லை. எதுவும் புரியாமல் குழப்பத்தோடு சாரின் முகத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தேன் நான்.

(இந்தியா டுடே 1989)


# THE FIRST GRADER

# கல்வி எனும் வலிமையான ஆயுதம்

கென்யாவில் ஒரு கிராமம். அங்கிருக்கும் வானொலியில் அறிவிப்பாளர் மகிழ்ச்சியோடு அறிவிக்கிறார், "அரசு அறிவிப்பு. அனைவருக்கும் கல்வி இலவசம்! பிறப்புச் சான்றிதழோடு சென்று பள்ளியில் சேர்ந்து கொள்ளலாம்."

மக்கள் கூட்டம் பள்ளியை நோக்கி விரைகிறது. ஆசிரியர்களுக்குக் கூட்டத்தைக் கட்டுப்படுத்த கடினமாக இருக்கிறது. "தலைமை ஆசிரியரைப் பார்க்க வேண்டும்" என்று ஒருவரின் குரல் கேட்டு, தலைமையாசிரியை ஜேன், பள்ளிக்கு முன்புறம் செல்கிறார்.

கம்பி வலையாலான கதவுக்குப் பின்னால் ஒரு வயதான மனிதர் நிற்கிறார். "என்ன வேண்டும்?" என்று ஜேன் கேட்டதும், முதியவர் தன் சட்டைக்குள்ளிருந்து ஒரு செய்தித்தாளை எடுத்து நீட்டுகிறார். 'அனைவருக்கும் இலவசக் கல்வி' என்ற அரசின் அறிவிப்பு தலைப்புச் செய்தியாக இருக்கிறது.



"இது குழந்தைகளுக்கான செய்தி. நீங்கள் வயதானவர்" என்று ஜேன் கூறுகிறார். "நான் ரேடியோவில் கேட்டேன். நம் நாட்டு மக்கள் எல்லோருக்கும் இலவசம் என்றுதான் சொன்னார்கள்" என்று அந்த முதியவர் கூறுகிறார்.

"பள்ளியில் சேர வேண்டும் என்றால் இரண்டு நோட்டுகள், கூர்மையாகச் சீவப்பட்ட பென்சில் ஆகியவை வேண்டும். உங்களிடம் இருக்கா?" என்று ஆசிரியர் ஆல்பர்ட் கூறியதும் முதியவர் திரும்பிச் செல்கிறார்.

மறுநாள் பள்ளிக்கூட வாசலுக்கு நோட்டு, பென்சிலோடு வருகிறார் முதியவர். "உங்களைப் பள்ளியில் சேர்க்க இயலாது. கல்வித் துறையிலிருந்து பிரச்சினைகள் வரும்" என்று ஜேன் கூறுகிறார்.

முதியவர் அதைக் கேட்கவில்லை.

"பள்ளிக்கு இப்படியான ஆடையில் வரக்கூடாது. பள்ளிச் சீருடையோடு காலில் ஷூ அணிந்து வர வேண்டும்" என்று ஆல்பர்ட் கூறுகிறார்.

அடுத்த நாள் சீருடைச் சட்டையும் டவுசரும் காலில் ஷூவும் அணிந்து வந்து நிற்கிறார் அசராத அந்த முதியவர். வேறு வழியின்றி அவரைப் பள்ளியில் சேர்த்துக்கொள்கிறார் ஜேன். அந்த முதியவரின் பெயர் மருகே. கென்யாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியவர்.

ஒரு நாள் வயதானவரைப் பள்ளியில் சேர்த்திருக்கும் செய்தியைக் கேள்விப்பட்டு அங்கு வருகிறார் கல்வி அதிகாரி.

"இவரை ஏன் பள்ளியில் சேர்த்தீர்கள்?" என்று ஜேனிடம் கோபமாகக் கேட்கிறார். "அவர் படிக்க விரும்புவதால் சேர்த்தேன்" எனப் பதில் சொல்கிறார். "என்னிடம் கேட்காமல் சேர்த்தது தவறு. அவர் படிக்க விரும்பினால் வயதானவர்களுக்கான பள்ளிக்குத்தான் போக வேண்டும்" என்று சொல்கிறார்.

உயரதிகாரிகளிடம் இருந்து ஜேனுக்கு அழுத்தம் வருகிறது. ஜேன், மருகேவிடம் பேசுகிறார். மருகேவும் சூழலை உணர்ந்து வயது வந்தோர் பள்ளிக்குச் செல்கிறார். அங்கு அனைவரும் இளம்பருவத்தினர். ஆசிரியர் நடத்தும் பாடத்தைக் கவனிக்காமல் பேசிக் கொண்டும், பாடிக் கொண்டும் இருக்கிறார்கள்.

அன்றே மருகே ஆசிரியர் ஜேனைச் சந்திக்கிறார். "அங்கு என்னால் படிக்க முடியவில்லை. எனக்கு வாசிக்க மட்டுமாவது சொல்லிக்கொடுங்கள். என்னிடம் ஒரு கடிதம் இருக்கிறது. அதை நானே வாசிக்க விரும்புகிறேன்" என்று வேண்டுகிறார்.



மறுநாள். ஜேன், பள்ளியை நெருங்கும்போதே குழந்தைகளின் பாடல் கேட்கிறது. வகுப்பறைக்குள் நுழைகிறார். ஆடிக்கொண்டே ஆங்கில எழுத்துகளைப் பாடலாக மருகே பாட, குழந்தைகளும் மகிழ்ச்சியோடு பாடி ஆடுகின்றனர். "இனி மருகே எனது உதவியாளராகப் பள்ளியில் இருப்பார்" என்று ஜேன் கூற, குழந்தைகள் மகிழ்கிறார்கள்.

நேரம் கிடைக்கும்போதெல்லாம் மருகேவுக்கு வாசிக்கச் சொல்லித் தருகிறார் ஜேன். முதியவர் படிக்கும் செய்தியறிந்து நிருபர்கள் பள்ளிக்கு வருகிறார்கள்.

"பேனா வலிமையானது. கல்வியே ஏழ்மையை விரட்டும்" என்று மருகே பேசுகிறார். மருகேவின் பேட்டி வெளிநாடுகளில் பரவுகிறது. மருகேவுக்கும் ஆசிரியைக்கும் நிறைய பணம் கிடைத்திருக்கும் என்று கிராமத்தில் சிலர் புரளியைக் கிளப்புகிறார்கள். சில பெற்றோர் பள்ளியைத் தாக்க முயல்கிறார்கள்.

தொடர் எதிர்ப்புகளால் ஜேனை வேறு பள்ளிக்கு மாற்றிவிடுகிறார்கள்.

புதிதாக வரும் தலைமை ஆசிரியரை ஆட்டம்பாட்டமாக வரவேற்று அழைத்து வருகிறார்கள். அதைப் பார்த்த குழந்தைகள் ஓடி வந்து பள்ளி நுழைவாயிலைப் பூட்டுகிறார்கள். "எங்களுக்கு ஜேன் தான் வேண்டும்" என்று கத்திக்கொண்டே கையில் கிடைத்தவற்றையெல்லாம் எடுத்து எறிகிறார்கள்.

இதையெல்லாம் பார்த்த மருகே, தலைநகர் நைரோபிக்குச் சென்று, அங்கே கல்வித் துறை செயலரிடம் நடந்தவற்றைக் கூறி, "ஆசிரியர் ஜேன் திரும்பவும் பள்ளிக்கு வரவேண்டும்" எனக் கேட்டுக்கொள்கிறார்.

ஜேன், மீண்டும் அதே பள்ளிக்கு அனுப்பப்படுகிறார். மருகேவும் குழந்தைகளும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு அவரை வரவேற்கின்றனர்.

உலகத் தலைவர்களிடையே உரையாற்ற மருகேவை ஐ.நா. சபை அழைக்கிறது. அங்கே அவர், "கல்வியே வலிமையான ஆயுதம், ஆக்கம் தரும் ஆயுதம், அனைவருக்கும் கல்வியைத் தருவது அரசின் கடமை" என உரையாற்றுகிறார். அத்தோடு படம் நிறைவடைகிறது.

84 வயதில் தொடக்கப் பள்ளிக்குச் சென்ற கிமானி மருகே என்பவரின் உண்மையான சம்பவத்தின் அடிப்படையில் உருவான படமே The first Grader.

இப்படம் ஆங்கிலத்தில் 2010ஆம் ஆண்டு வெளியாகிப் பலரது கவனத்தையும் பெற்றது.

**– கலகல வகுப்பறை சிவா**




# முயற்சிக்குப் பலன் கிடைத்தது

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் நான் என் வகுப்பை மாற்றத் திட்டமிட்டேன். முதலில் ஆங்கில ஆய்வகம் என்ற பெயரைத் தேர்வு செய்தேன். பின் அதற்கு என்ன தேவை என்பதைப் பட்டியலிட்டேன். அச்சமயம் வாலபாடி ஒன்றியத்தில் சிவகுமார் என்பவர் ஆங்கிலப் பேச்சாற்றலை மேம்படுத்த புதிய உத்தி ஒன்றை கையாண்டு வருவதாக நான் முகநூல் மூலம் அறிந்தேன். எங்கள் ஒன்றிய ஆசிரியர்களுடன் சென்று பார்த்துப் பயிற்சி பெற்றோம்.

அவர் முறையைப் பின்பற்றி Tri verb Method மூலம் வகுப்பு முழுக்க வண்ணப் படங்களையும் Projection முறையில் ஒட்டினேன். இதற்குக் கூடுதல் துணை புரிய தொலைக்காட்சிப் பெட்டி தேவைப்பட்டது. புரவலர்களை நாடிப் பெற்றோம்.

இந்த ஆங்கில ஆய்வகத்திற்கு “Express train English Lab” என்று பெயர் சூட்டினோம். இது மாணவர்களுக்கு எளிய முறையில் ஆங்கிலம் பேச உதவியது. பின் வாசிப்பை மேம்படுத்தி என்ன செய்யலாம்? என்று யோசித்தபோது எனது நண்பர் Connector Pin பற்றி கூறினார். மூன்று Connector மூலம் 18 Head phone set செய்தேன். எனது குரலில் பாடங்களை வாசித்து ஒலிப்பதிவு செய்தேன். எனது கைபேசியைக் கொண்டு மாணவர்களுக்குப் பாடங்கள், பாடல்களைப் பதிவு செய்து ஹெட் போன் (Head phone) மூலம் கேட்கச் செய்து புத்தகத்தை உடன் வாசிக்க வைத்தேன். ஆங்கிலம் அழகாக வாசிக்கும் குழந்தைகளுக்கு “Stylish Reader” பட்டை (Badge) வழங்கப்பட்டது. Flannel board ஒன்று உள்ளது. இதில் மாணவரின் சிறந்த செயல்பாடு காட்சிப்படுத்தப்படும். இதெல்லாம் ஓராண்டு காலத்தில் நிறைவு செய்தேன். அப்போது 8ஆம் வகுப்பில் மாற்றுத்திறன் மாணவன் ஒருவன் இருந்தான். மைலேஷ் என்பது அவன் பெயர். ஒரு மாத ஆங்கில ஆய்வகப் பயன்பாட்டிற்குப் பின் ஒரு நாள் அவன் "Miss ss... I have ... a pen ..." என்று கூறினான். என் கண்கள் குளம் போல் மாறியது. சற்று ஊக்குவித்தேன். என்னிடம் முயற்சித்து மெல்ல மெல்லப் பேச ஆரம்பித்தான். SCD Child ஜீவா என்ற மாணவி ஆங்கிலம் பேசுவதில் ஆர்வம் காட்டினாள். அன்று இதற்காக நான் செய்த முயற்சி யாவும் பலன் பெற்று என் முன் நிற்பது போல் தோன்றியது.

–இர.கா. உமாதேவி, பட்டதாரி ஆசிரியர், ஊ.ஒ.ந.நி.ப., கூகலூர், கோபி, ஈரோடு.

# ஒரு பூங்கொத்தால் உருவான பூங்கா

புதிதாக நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பொறுப்பினை ஏற்று பணியைத் தொடங்கினேன். புதிதாகத் தரம் உயர்த்தப்பட்ட பள்ளியாகும் வடகுடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. மாற்றங்கள் அதிகம் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருந்தது. பள்ளி மைதானம் செடிகள் எதுவும் இல்லாமல் சுட்டெரிக்கும் வெயிலில் நிற்பதற்குக்கூட நிழல் இல்லாமல் இருந்தது.

மாற்றத்தினை எங்கிருந்து தொடங்கலாம் என்று நினைத்தேன். தினம் ஒரு பூங்கொத்தினைத் தயாரித்து மேஜையின் மீது வைக்க வேண்டும் என்று மாணவர்களிடம் கூறினேன். தயாரானதோ விதவிதமான பூங்கொத்துகள். தோட்டத்தில் ஒவ்வொரு செடியாகத் தினம் தினம் முளைக்கத் தொடங்கின. மாணவர்களுடன் ஆசிரியர்களும், பெற்றோர்களும் போட்டிப் போட்டுக்கொண்டு செடிகளை நட்டனர்.

ஜெ.ஆர்.சி. எனப்படும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்க மாணவர்களுடன் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் உள்ளூர் பிரமுகர்களுடன் அடிக்கடி மரம் நடும் விழாக்கள் நடைபெற்றன.

வடகுடி கிராமத்தின் இளைஞர் நற்பணி மன்றத்தினரின் பங்கு அளப்பரியது. ஏராளமான மரக்கன்றுகளையும் பூஞ்செடிகளையும் பள்ளித் தோட்டத்தில் நட்டு, தன் கிராமப் பள்ளியின் அழகைக் கண்டு ரசித்தனர். விளைவு சிவப்பும், மஞ்சளுமாகப் பலவண்ண நிறத்தில் மலர்கள் மலர்ந்தன.

மாணவர்கள் தங்கள் பள்ளியில் மலர்ந்த மலர்களைக் கொண்டு தினமும் பூங்கொத்தினைத் தயார் செய்து தங்களது வகுப்பறையில் வைத்தனர்.

2016ஆம் ஆண்டில் பள்ளிக்குத் தூய்மைப் பள்ளி விருதானது தமிழக அரசால் வழங்கப்பட்டது பெருமகிழ்ச்சி.

– அ. மேரி இசபெல்லா,
பட்டதாரி ஆசிரியர், ஊ.ஒ.ந.நி. பள்ளி,
செருவலூர், நன்னிலம் ஒன்றியம்,
திருவாரூர்

Publisher & Editor: **C. Amuthavalli**, Printer: **B. Rajkumar**, Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district, PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.

# பள்ளிகளில் காத்திருக்கும் ‘உயர்கல்வி வழிகாட்டிக் குழு’

மாணவர்களுக்கு கைப் பிடித்து எழுதப் பழகிக் கொடுத்த ஆசிரியர்களே அவர்களின் கல்லூரிக் கனவை நனவாக்க அரசுப் பள்ளிகளில் காத்திருக்கிறார்கள்.




**‘நான் முதல்வன்’**
திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், நாட்டு நலப்பணித் திட்டத் தன்னார்வலர்கள், தலைமை ஆசிரியர்கள் என ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர்கல்வி வழிகாட்டிக் குழு வாயிலாக உதவி செய்யக் காத்திருக்கிறார்கள்.

## நம் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக்க உயர்கல்வி வழிகாட்டிக் குழுவை அணுக உதவுவோம்



ஆசிரியர்களின் திறமைகளை அங்கீகரிக்க SCERT வழங்கிய ‘கனவு ஆசிரியர் 2023’ போட்டி

## இறுதிச்சுற்றுக்குத் தேர்வான ஆசிரியர்களுக்கு வாழ்த்துகள்



## அனைத்து மாணவர்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்படுவதை உறுதி செய்வோம்!



தமிழ்நாடு முழுவதும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு...

| | |
|---|---|
| 429 | பள்ளி ஆயத்தப் பயிற்சி மையங்கள் |
| 400 | இயன்முறை மருத்துவ நிபுணர்கள் |
| 1600 | சிறப்பு ஆசிரியர்கள் |

அனைவருக்குமான வகுப்பறையில் **1,60,000** மாற்றுத்திறனாளி குழந்தைகள் மகிழ்ச்சியுடன் கற்றலில் ஈடுபடுகிறார்கள்.

**Kanavu Aasiriyar** Monthly Registered with RNI No: **TNTAM/2022/82359.** Postal Regn No: **TN/CH(C)/600/2022-2024**
Licensed to Post Without Prepayment No: **TN/PMG(CCR)/WPP-679/22-24**
Date of publication 1st Day of every month Posted between 1st - 7th July 2023 Posted at Egmore, RMS/ Patrika Channel

பொது கவிதை




# பகல்நேர வகுப்பறை

அந்தி சாயும் வேளையில்
கைகளில் தேநீர் கோப்பையுடன்
கண்கள் விரிய கதை நவில்கிறது
பகல் நேர வகுப்பறை.

ஆரவத்தில் அனைத்தையும்
கேட்டு மகிழ்கிறது
இரவு நேர வகுப்பறை.

அன்று ஒரு மாணவனின்
பிறந்த நாளாம்
உறை பிரித்து மிட்டாய்களைப்
பகிர்ந்த வேளையில்
தானும் சிறிது இனிப்பைச்
சுவைத்துக் கெண்டது.

வராத மாணவர்களின்
இருப்பிடத்தில் சோகமாய்
அமர்ந்துகொண்டு பாடங்களைக்
குறிப்பெடுத்துக் கொள்கிறது.
வாய்ப்பாட்டின் ராகத்தை
ரசித்தவாறே தானும்
அதில் ஊடாடுகிறது.

மதிய இடைவேளையில்
உணவுப் பருக்கைகளினூடே
சிந்தியும் தண்ணீர் புட்டிக்ளைச்
சாய்த்தி ஊற்றும்
மிடறுகளில் வழிந்தோடியும்
தன் இருப்பைப்
பதிவு செய்துகொள்கிறது
வகுப்பறை.

காய் விட்டுக் கொள்ளும்
சிறுமியின் பொய்க் கோபத்தில்
சிறு முறைப்பைக் 'கனி'வித்துத் தர
பதறி எத்தனிக்கிறது.

தொலைந்துபோன
பேனா, பென்சில்களுக்கு
அழும் பிள்ளைகளின் சார்பாகத்
தானே ஆஜராகி,
தருவித்தும் கொடுக்கிறது.

சமயத்தில்
தேநீர் உறிஞ்சியபடியே
சொல்கிறது

பகல் நேர வகுப்பறையாய்ப்
பிறந்ததற்காய் நான்
என்ன தவம் செய்திருப்பேனே?

மதிய உணவின்போது சிந்தும்
பருக்கைகளைக் கொஞ்சம்
காகங்களுக்கும் அணில்களுக்குமாய்
பத்திரப்படுத்தி வைக்கிறது.

ஞாயிறன்று
வகுப்பறை முழுக்க
சிதறிக் கிடக்கும்
ஒரு வாரச் சிரிப்புகளையும்
கோர்த்து
வாயிற் தோரணமாக்கிப்
பொன் ஒளிரும் திங்களுக்காய்
கண்கள் மலர்ந்து காத்திருக்கிறது
பகல் நேர வகுப்பறை.

– **கா.அபிராமி,** பட்டதாரி ஆசிரியர்,
அ.உ.நி.பள்ளி, க.அலம்பளம்,
கள்ளக்குறிச்சி

கனவு ஆசிரியர்
ஆசிரியர்களே! உங்கள் படைப்புகளும் இடம் பெற வேண்டுமா? எழுதி அனுப்புங்கள்...
ஆசிரியர், 'கனவு ஆசிரியர்', 8வது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 600 006. மின்னஞ்சல்: kanavuaasiriyar@tnschools.gov.in